லை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

கங்கள்: பதினாறு

து 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 15 செவ்வாய்க்கிழமை (01.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 317

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO



ங்கை-சீன நாடுகளுக்கிடையிலான இரு தரப்பு பேச்சுவார்த்தை நேற்று ஷாங் ில் நடைபெற்றபோது...

# இலங்கை-சீனா நட்பு இந்தியாவுக்கு கடுப்பு

(கொழும்பு)

லங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான நட்பு ன்மைக் காலமாக வலுவடைந்து வருவதால், தியா கடுப்படைந்துள்ளது.

தலைப்புலிகளுடனான க்குப் பின்னர் இலங்கை சியல் எல்லைக்குள் சீனா ழைவு இந்தியாவுக்கு ஆத் ஏற்படுத்தியிருந்தது.

லைப்புலிகளை தோற் இந்தியாவின் உதவியை முழுமையாகப் பெற்றுக்கொண்ட இலங்கை அரசு யுத்தத்தின் முடி புக்குப் பின்னர் சீனாவுடன் தனது உறவை பலப்படுத்தி வருவதுடன்

சீன நாட்டவர்கள் இலங்கையில் வீதிஅமைப்புபணியில்ஈடுபடுவதற்கும் அனுமதியளித்தது.

இது தொடர்பில் தனது அதிருப் தியை மறைமுகமாக வெளிப்படுத்தி வந்த இந்தியா, சீனர்களின் ஊடுரு வல் இலங்கைக் கூடாக ஏற்படு வதை தடுப்பதற்காக சில இராஜதந் திர நடவடிக்கை மேற்கொள்வதற்கு அழுத்தம் (16ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலியப் பயணத்தில் கடலில் உயிரிழந்தவர்கள்

### பெயர் விபரம் வெளியாகியது

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு அரசியல் தஞ்சம் பெறுகின்றமைக்காக மேற் கொண்ட சுமார் ஒன்றரை மாத படகு பயணத்தின் போது கடந்த ஒக்டோபர் மாதத்தின் இரண்டாம் வாரத்தில் உயிரிழந்த இலங்கைத் தமிழரின் பெயர் விபரங்கள் தெரியவந்துள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான ஜக்ஸன் (வயது 24) மற்றும் டிசான் (வயது 26), கிளிநொச்சி மாவட்டத்தின் உதயபுரம் நகர்ப் பகுதியை சேர்ந்த ரகுமார் செல்வரஞ்சினி ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

நடுக் கடலில் சிக்கியபோது மீன்பிடிப்படகு ஒன்றை கண்ட ஜக்ஸன் அப் படகில் சென்றுகொண்டிருந்தவர்களிடம் உதவி கோருகின்றமைக்காக உயிரைப் பணயம் வைத்து கடலில் குதித்தார். நீந்திச் சென்று அம் மீன் பிடிப் படகை அடைகின்றமை அவரின் நோக்கமாக இருந்தது. எனினும் அவர் நீரில் மூழ்கி இறந்துவிட்டார்.

படகோட்டியின் உதவியுடன் கட்டுமரம் ஒன்று கட்டப்பட்டது. இக்கட்டு மரத்தில் சென்று அருகிலுள்ள ஏதேனும் ஒரு சிறிய தீவை சென்றடைய லாம் என்ற நம்பிக்கையில் படகோட்டியும், டிசானும் பயணித்தனர். இடை யில் கட்டுமரம் கடலில் மூழ்கத் தொடங்கியது. படகோட்டி ஒருவாறு நீச்சல் போட்டு தப்பினார். டிசான் உயிரிழந்துவிட்டார்.

இந்தோனேசியாவின் பனைடான் தீவை இவர்கள் சென்றடைந்தபோது கரை ஒதுங்குகையில் கருங்கல் பாறை ஒன்றுடன் தலை மோதுப்பட்டு செல்வரஞ்சினி உயிரிழந்தார். இவர் ஒரு குழந்தையின் தாய். இவர்கள் மன்னாரிலிருந்து கடந்த ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி படகொன்றில் புறப் பட்டிருந்தனர்.

இந்தியாவுக்கு அருகிலுள்ள கடல் பகுதி ஒன்றை இரு நாட்களில் சென்ற டைந்தனர். இந்தியாவிலிருந்து வந்து (16ஆம் பக்கம் பார்க்க)

## சீனப் பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு

(ஷாங்காய்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீன பிரதமர் மற்றும் நேபாள ஜனாதி பதி ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஷாங்காய் எக்ஸ்போ கண்காட்சி நிறைவு நிகழ்வுகளில்கலந்துகொண்ட போது ஜனாதிபதி, சீன பிரதமர் மற் றும் நேபாள ஜனாதிபதி ஆகியோரை சந்தித்துள்ளார்.

ஷாங்காயின் சிக்ஜியாவோ அதி திகள் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

வெளிவிவகார அமைச்சர்ஜி.எல். பீரிஸ், வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச, நாடாளுமன்ற உறுப்பி னர் சஜின்வாஸ் குணவர்த்தன மற் றும் சீன (16ஆம் பக்கம் பார்க்க)

## பொது நூலக விவகாரம் ர் பண்டார இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

து நூலகத்தில் அண்மையில் சிங் லாப் பயணிகள் அசம்பாவிதத்தில் ம்பவத்தின்போது உரிய நடவடிக்கை ல்லை என்ற குற்றச்சாட்டில் யாழ். ர்வாக அலுவலகர் மேஜர் பண்டார ாக (16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் புலனாய்வுப் பிரிவு

(கொழும்பு)

கு-கிழக்குப் பகுதி தவிர்ந்த பிரதே ் நடவடிக்கையில் ஈடுபடும் முகமாக ளைப்படும் புதிய இராணுவப் புலனாய் வு (16ஆம் பக்கம் பார்க்க)

# எமது இலக்கினை வென்றெடுக்க தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை அவசியம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமையின் மூலமே எமது இலக்கினை வென்றெடுக்க முடி யும்.எனவே தான் தமிழ், முஸ்லிம் சமூகங் களுக்கு இடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்த சில தீயசக்திகள் முயற்சிக்கின்றன.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறி தரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல நோக்குக் கூட்டறவுச் சங்க மண்ட பத்தில் நடைபெற்ற தற்கொலைக் குறிப்புக்கள் என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தனது உரையில்,

அண்மையில் யாழ்.பொதுநூலகத்தில் சிங் கள சுற்றுலாப் பயணிகளால் மேற்கொள்ளப் பட்ட அடாவடித்தனம் சிங்களப் பயங்கரவாதமே.

இச்சம்பவத்தின் மூலம் எம்மை இரண்டா தம் தரப்பிரஜைகளாக அவர்கள் காட்டியுள்ள னர்.தந்தை செல்வாவின் நினைவிடத்தையும் சிதைக்க அவர்கள் முற்பட்டுள்ளனர்.

எனவே கடந்த காலத்தில் ஏற்பட்டவையை மறந்து தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இணை வதன் மூலமே எமது இலக்கை வென்றெடுக்க முடியும் என்றார். (ந-5)

தி அனுமதிப்பத்திரம் (Lisence) தேவையில்லை
ட்றோல் செலவில்லை
றந்த எடை & நீண்ட பாவனை
ருவாக மிதித்தும் செல்லலாம்
ு தொழில்நுட்பத்துடன் அமைந்தது
ு மணித்தியாலங்கள் தொடர்ந்து மின்னேற்றினால்
70Km வரை பயணம் செய்யலாம்
Km க்கான செலவு 0.15 சதம் மாத்திரமே
ிக்கு 8 மாதம் மோட்டாரிற்கு ஒரு வருடம் உத்தரவாதம்
ASP ENTERPRISES
யாழ் மண்ணில் புதியதோர் உதயம்
மின்சார சக்தியில் இயங்கும் புதிய
Atlas E-Bike
புதிய தோற்றத்துடன் விற்பனையாகின்றது.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்

கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0213001585, 0776079352

# புலிகளை அரசு வெற்றி கொண்டபின்

# சிங்கள மக்கள் தாம் எதுவும் செய்யலாம் என நினைக்கின்றனர்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)


**யாழ் நூலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவம் படித்த, நாகரிகம் தெரிந்த மக்களை வெட்கித் தலை குனிய வைத்துள்ளது. இந்தச் சம்பவத்தின் மூலம் இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் தான் என்பதை அரசாங்கம் நிரூபித்து விட்டது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.**

கடந்த வாரம் யாழ். நூலகத்துக்குள் நுழைந்த தென்னிலங்கைச் சிங்கள சுற்றுலாப் பயணிகள் அறிவித்தலை மீறி நூலகத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்து அங்கிருந்தபுத்தகராக்கைகளைகீழேதள்ளி விட்டுப் புத்தகங்களையும் வீசிய சம்பவம் தொடர்பிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் அரசாங்கம் வெற்றி கொண்டதன் பின்னர் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் புதுவித கருத்தொன்று இன்று தோன்றியுள்ளது. தாங்கள் எங்கும் செல்லலாம், எதனையும் செய்லாம். யாரும் ஏன் எதற்கு என்று கேட்க முடியாது.

தாம் எப்படி நடந்து கொண்டாலும் அதற்கு இலங்கை அரசின் படைத்தரப்பு பாதுகாப்புத் தரவேண்டும் என்ற எண்ணத்திலேயே இவர்கள் உள்ளனர். விரும்பத்தகாத குறிப்பிட்ட சம்பவத்தை ஆராயும் போது கூட இதுவே புலப்படுகிறது.

யாழ். நூலகமென்பது கற்றலுக்கானதொரு இடம். அங்கு செல்பவர்கள் அமைதியான முறையில் தமது கற்றல்நடவடிக்கைகளைமுன்னெடுக்க வேண்டும். இங்கு ஒரு நிகழ்வு நடக்குமானால் அதனைக் குழப்புவதற்கு யாரும் முயற்சிக்கக் கூடாது. ஜனாதிபதி அலுவலகத்திலிருந்தோ அல்லது வெள்ளை மாளிகையிலிருந்தோ எவரும் வர முடியும். ஆனால் நாட்டின் சட்டம் அனைவருக்கும் ஒரே மாதிரியானதே. ஜனாதிபதி செயலகத்திலிருந்து வருகிறேன் என்னை



உள்ளே அனுமதியுங்கள் என்று ஒருவர் கேட்டால் அவரை உடனடியாக அனுமதிக்க வேண்டும் என்று எந்தச் சட்டமும் இல்லை. ஆனால் அவருக்கு அடிபணிந்து இராணுவமும் பொலிஸாரும் செயற்படுவது கண்டிக்கத்தக்க விடயம்.

அனுராதபுரத்துக்கும் பொலநறுவைக்கும் தமிழர்களும் முஸ்லிம்களும் சென்று இவ்வாறு நடந்து கொள்ள முடியுமா? அவ்வாறு நடந்து கெண்டால் நிலை என்னவாகும். இங்குள்ள காணிகளில் நாங்கள் இருபது வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தோம். என்று கூறினல் அது கிடைக்குமா இதனை அரசாங்கம் தான் ஏற்றுக்கொள்ளுமா?

யாழ்.புகையிரத நிலையத்தில் சுமார் 150 சிங்கள மக்கள் தங்கியுள்ளனர். தாம் இருபது, முப்பது வருடங்களுக்கு முன்னர் இங்கு வாழ்ந்ததாக இவர்கள் கூறுகின்றனர். இருந்திருக்கலாம்.

நாம் இல்லையென்று மறுக்கவில்லை. இப்போது அவர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. கொழும்பிலிருந்து அமைச்சர் வந்து அவர்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளார். கொழும்பிலிருந்து அவர்களுக்குச் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படுகிறது.

ஆனால் இருபது முப்பது வருடங்களாகத் தமது சொந்த மண்ணுக்குத் திரும்பமுடியாமல் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இன்னும் அகதி முகாம்களிலேயே உள்ளனர். அவர்களைத் திரும்பிப் பார்ப்பதற்கு இந்த நாட்டில் அமைச்சர்களும் இல்லை. அதிகாரிகளும் இல்லை.

இதே போன்று கிழக்கு மாகாணத்தின் மூதூர், சம்பூர் போன்ற பிரதேசங்களிலிருந்து விரட்டப்பட்ட மக்கள் இன்னும் அகதி முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர். அந்த மக்களையாவது சொந்த இடங்களில் மீள்குடியேற்றும் அக்கறை இந்த அரசாங்கத்திற்கு இல்லை.

ஆனால் பெரும்பான்மைச் சமூகத்திற்கு இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் ஒன்றுக்குப் பத்து மடங்கான உதவிகளும் ஒத்தாசைகளும் பாதுகாப்புக்களும் வழங்கப்படுகின்றன.

தமிழ் மக்கள் என்றால் அவர்கள் விரும்பத்தகாதவர்களாகவும் தீண்டத்தகாதவர்களாகவும் நோக்கப்படுகின்றனர். பயமுறுத்தி அவர்களை அடக்கும் முயற்சிகளே இடம்பெறுகின்றன.

வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு உல்லாசப் பயணம் செய்யும் சிங்கள மக்கள் இந்த மனோபாவத்தைக் கைவிட வேண்டும். அதனையும் மீறி இவர்கள் விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். இதனை விட்டுவிட்டு அவர்களைப் பாதுகாப்பதும் கௌரவிப்பதும் ஓர் அநாகரிமான செயல்.

இதேவேளை அரசாங்கம் கூறும் இன நல்லொழுக்கம் என்பது கிட்டவே நெருங்கிவர முடியாத ஒன்று என்பது இச் சம்பவங்கள் மூலம் தெட்டத்தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ந-5)

## உயர்கல்வி அமைச்சருக்கு ஜே.வி.பி. அழைப்புக் கடிதம்

(கெழும்பு)

கல்வித்துறையில் காணப்படும் குறைபாடுகள் பற்றி திறந்த மனதுடன் பேச்சுநடத்த வருமாறு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு ஜே.வி.பி. அழைப்பு விடுத்துள்ளது.

ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க இவ் அழைப்பு[illegible] அழைப்பினை[illegible]

பல்கலைக்கழகங்களில் காணப்படும் குறைபாடுகளை சீர் செய்வதை விடுத்து தமது கட்சியினைக் குற்றம் சுமத்துவதை மட்டுமே அரசு குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இது போன்ற கசப்பான எதிர்வினைகளை தோற்றுவிக்காமல் எதிர்காலக் கல்விச் செயற்படுகளுக்காக புரிந்துணர்வுகளை ஏற்படுத்திக் [illegible]ளவேண்டும் என அவர் [illegible]தெரிவித்துள்ளார். (ந-7)





### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டின் லேனில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பிற்கு :-
0770452612

(2775)

### வேலைக்கு ஆட்கள் தேவை

[illegible]மிழ், ஆங்கிலம் கணனி ரைப்செற்றிங், போட்டோக்கொப்பி பிரதியாக்கல் தெரிந்த அல்லது பழகவிரும்புபவர்கள் தேவை.

நேரில் வரவும். தொடர்புகளிற்கு :
**Fine Graphics**
**146, Ramanathan Road, Jaffna.**
(யாழ்.பல்கலைக்கழக குமாரசுவாமி விடுதிக்கு முன்பாக)

(சி-1531)

### உடனடி வேலைவாய்ப்பு

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் நிறுவனம் ஒன்றின் யாழ்ப்பாணக் கிளைக்குச் சந்தைப்படுத்தல் தொடர்பாளர் (Marketing Coordinators), விற்பனை அபிவிருத்தி உத்தியோகத்தர், (Sales Development Officers) அலுவலக உதவியாளர் (Office Aid) தேவை. விரும்புவோர் சுயவிபரக் கோவையுடன் 02.11.2010க்கு முன்னர் அலுவலக நேரத்தில் 117, ஸ்ரேசன் ரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

021 3670100 / 0776164901

(சி-1530)


## மாணவர் சமூகத்தை வழிப்படுத்த கல்விச் சமூகம் அணிதிரள வேண்டும்!

### யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் மத்தியில் ஏற்படக்கூடிய க[illegible] பிறழ்வுகளை முழுமையாகத் தடுத்து நிறுத்துவதற்கு கல்விச் சமூகம் அணதிரள வேண்டும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான விஷேட கூட்டம் ஒன்றிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

எமது இளம் சமூகத்தின் உழைப்பு நேரம் வெறுமனே செலவிடப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

ஒவ்வொரு மாணவரும் தமது எதிர்கால சிந்தனை பற்றிய விழிப்புணர்வைக் கொண்டிருப்பார்களாயின் உயர்தரப் பரீட்சைக்குப் பின் அவர்கள் தங்கள் நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிடுவர்.

மாணவர்களிடம் தமது எதிர்காலம் பற்றிய கற்பனைகள் எதுவும் இல்லாததன் விளைவாகவே எமது இளம் சமூகம் பொன்னான நேரத்தை வீணே கழிக்கின்ற துரதிஷ்டம் ஏற்படுகின்றது.

இன்றைய பொருளாதார சூழ்நிலையில் மிகக் கடுமையாக உழைக்க வேண்டிய இளம்சமூகத்தின் உழைப்பு நேரம் வீண் பொழுதாகுமாக இருந்தால், அது எமது பண்பாட்டு கலாசார விழுமியங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே பாடசாலைகளிலிருந்து வெளியேறும் ஒவ்வாரு மாணவரும் தமது அடுத்தகட்ட செயற்பாடு தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் ஆற்றலை சகல பாடசாலைகளும் வழங்க வேண்டும்.

இதுவிடயத்தில் அதிபர்களி[illegible] பங்களிப்பு அவசியமாகும் எனக் குறிப்பிட்ட யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம்,

எமது மாணவர்கள் எங்கள் பண்பாட்டு கலாசார விழுமியங்களைப் பேணுவதை உறுதி செய்வதில் பாடசாலைச் சமூகம் காத்திரமான பங்கை ஆற்றுவது அவசியம்.

மாணவர்களை எமது பிள்ளைகள் என்ற தூய சிந்தையோடு அவதானிக்கும் போது அவர்களை வழிப்படுத்துவதும் அவர்கள் தங்கள் பிரச்சினைகளை எம்மோடு பகிர்ந்து கொண்டு தீர்வு காணவும் உதவும்.

இதனைச் செம்மையாகச் செய்யும் போது மாணவர்களின் ஒழுக்கம் உயர்வு பெறும். அதன் மூலம் நாமும் பெருமையடைய முடியும் என்றும் குறிப்பிட்டார். (ந)


### தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

**VTL MANAGMENT**
**Daanston House**
**Colombo -03**
**T.P. 072 9994777**


## ஐ.தே.கட்சியால் மட்டுமே மக்களுக்கு நன்மை – ரணில்

(கொழும்பு)

நாட்டு மக்களுக்கு நலனை வழங்கும் அரசியற் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியே என அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிலியந்தலையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாட்டின் கல்வி நிலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக நடவடிக்கைகள் குழப்பம் அடைந்துள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டின் உன்னத நிலையைப் பாதிக்கும்.

முன்னைய காலங்களில் வேலைவாய்ப்பிற்காக கொழும்பிற்கு வரவேண்டிய நிலை காணப்பட்டது. ஆனால் தற்போதைய நிலையில் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளிற்கே செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது. இவ்வாறான நிலைமைகளை மாற்றியமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். அதுவே நாட்டின் அபிவிருத்திக்கு வளிகோலும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-7)

# இன்று ஒரு தகவல்

## நால்வகை மனிதர்கள்

இந்த சமுதாயத்தில் உள்ள மக்களை நான்கு வகையாக பிரிக்கலாம் என்று ஒரு பெரியவர் சொல்கிறார். நல்லதையே நினைத்து நல்லதையே செய்பவர்கள் முதல் ரகம். அவர்களை மேன்மக்கள் என்று சொல்லலாம்.

இவர்களெல்லாம் எப்படியானவர்கள் என்றால்,

" நாம் கஷ்டப்பட்டாலும் சரி, அடுத்தவர்கள் நன்றாக இருக்க வேண்டும்" என்று நினைப்பவர்கள் வாழ்க்கையை பொதுப் பணிக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள். எல்லாம் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் அப்படிப்பட்டவர்கள் கிடைத்து விட்டால் மக்கள் அதிர்ஷ்டசாலிகள்.

ஒருத்தர் பஸ்ஸில் உட்கார்ந்து பயணித்துக் கொண்டிருந்தார். இன்னொருத்தர் நின்று கொண்டு வந்தார்.

இவர் பார்த்தார். "சேர், நீங்க உட்காருங்க" என்று சொல்லி அவரைத் தன் இருக்கையில் உட்கார வைத்து விட்டு இவர் நின்று கொண்டு வந்தார்.

இவரைப் பார்த்தால் நம்முடைய கண்ணுக்கு ஏமாளியாகத் தெரியலாம். ஆனால் இது போன்ற குணம் படைத்தவர்களெல்லாம் மேன் மக்கள். நான் சொன்ன முதலாவது ரகம்.

அடுத்தது இரண்டாவது ரகத்தைச் சேர்ந்த மனிதர்கள். இவர்களை பொதுவாக 'நல்லவர்கள்' என்று சொல்லலாம். என்று சொல்லலாம்.

இவர்கள் எப்படியானவர்கள் என்றால், நியாயத்துக்கு கட்டுப்படுபவர்கள்.

மற்றவர்களுக்கு துன்பம் விளைவிக்க மாட்டார்கள். இருந்தாலும் மற்றவர்கள் சௌகரியமாக இருக்க வேண்டும் என்பதற்காக தன்னுடைய சௌகரியத்தை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க மாட்டார்கள்.

பஸ்ஸில் ஒரு இருக்கையில் இந்த இரண்டாவது ரக ஆள் உட்கார்ந்திருக்கிறார். இன்னொருவர் நின்று கொண்டு வந்தார்.

நம்ம ஆள் நிற்பவருக்காக பரிதாபப்படுவாரே தவிர, எழுந்து நின்று அவரை உட்கார வைத்துவிட்டு தான் நின்று கொண்டு வரமாட்டார். அந்த அளவுக்கு நான் தியாகி இல்லை என்றும் சொல்லிவிடுவார்.

இவர்களெல்லாம் இரண்டாவது ரகம்.

மூன்றாவது ரகம் எப்படித் தெரியுமா?

சொந்த சௌகரியத்துக்காக மற்றவர்களின் சௌகரியத்தை கெடுப்பதற்கு துணிந்து விடுவார்கள்.

ஏற்கனவே பஸ்ஸின் இருக்கையில் வேறொருவர் துண்டு போட்டு வைத்திருந்தாலும் அதைத் தூக்கியாருக்கும் தெரியாமல் ஜன்னல் வழியாக வெளியே போட்டு விட்டு அந்த இடத்தில் நல்ல பிள்ளை மாதிரி உட்கார்ந்திருப்பார்.

துண்டு போட்டவர் வந்து கேட்டால்... "துண்டா? நான் பார்க்கவில்லையே" என்று சொல்லுவார். இது மூன்றாவது ரகம்.

நான்காவது ரகம் எப்படியென்றால் தனக்கு எந்த வித பலனும் இல்லையென்றால் கூட மற்றவர்களுக்கு ஏதாவது துன்பம் விளைவித்துக் கொண்டே இருப்பார். அதில் ஒரு சுவாரஸ்யம் என்னவென்றால்,

இவர் பஸ்ஸில் உட்கார்ந்திருப்பார். இவருக்கு பக்கத்து இருக்கையில் ஒருத்தர் துண்டு போட்டிருப்பார். இவர் அந்த துண்டை எடுத்து வெளியே போட்டுவிட்டு சத்தம் போடாமல் இருந்துவிடுவார். வேறொருவர் வந்து "சேர், இடம் காலியாக இருக்கிறதா? உட்காரலாமா?" என்று கேட்பார்.

"உட்காருங்களேன்" என்பார் இவர். அதன்பின் துண்டு போட்டவர் வருவார். இரண்டு பேருக்கும் சண்டை வந்து விடும்.

நம்ம ஆள் அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார். இவர் நான்காவது ரகம்.

இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவெனில், ஒரு சமுதாயத்தில் முதல் ரகமும் இரண்டாவது ரகமும் எவ்வளவுக்கு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அந்த சமுதாயம் நல்லவிதமாக இருக்கும்.

இப்பொழுதெல்லாம் நான்காவது ரகம்தான் அதிகமாக இருக்கிறது.

இந்த நிலை மாற வேண்டுமெனில், முதல் ரகமான மனிதர்களை நாம் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

சரி, முதல் ரகமா, மூன்றாவது ரகமா என்று எப்படிக் கண்டு பிடிப்பது?

நாம்தான் சாமர்த்தியமாக அதைக் கண்டு பிடிக்க வேண்டும். வாக்குக் கேட்கும் முறையை வைத்துக் கூட அவர்கள் எந்த ரகம் என்பதை ஓரளவுக்குக் கண்டு பிடிக்கலாம். அப்படித்தான் ஒருவர் வாக்குக் கேட்க வந்தார்.

அவர் எப்படியானவர் என்றால்... ஒவ்வொரு வீடாக போவார். அந்தந்த வீட்டில் இருப்பவர் என்னவேலை செய்தாரோ அந்த வேலையை இவரும் செய்வார். அப்படி செய்து கொண்டே வாக்கு கேட்பார்.

அதேமாதிரி ஒரு வீட்டுக்குப் போனார். இவர் போன நேரத்தில் அந்த வீட்டுத் தோட்டத்தில் அவர் கொத்திக் கொண்டிருந்தார். இவர் உடனே தானும் ஓடிப்போய்இன்னொரு மண்வெட்டியை எடுத்துக் கொண்டு அவருக்கு பக்கத்திலேயே கொத்த ஆரம்பித்தார். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த சிறிது நேரம் கொத்தினார். அதன் பின் மெதுவாக பேச ஆரம்பித்தார்.

"நான் தேர்தலில் நிற்கிறேன். உங்களுடைய வாக்கை எனக்குப் போட வேண்டும்" என்றார். "அது முடியாத காரியம்" என்றார் அவர்.

"ஏன்?" என்று கேட்டார் இவர்.

"ஏனென்றால் நான் இந்த வீட்டுக்காரன் இல்லை. நானும் உங்களை மாதிரி வாக்குக் கேட்க வந்தவன் தான். அதுதான் கொத்திக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்ட போட்டி முடிவுகள்

சாவகச்சேரி பிரதேசசபையின் கச்சாய் பொது நூலகத்தினாடு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் சாவகச்சேரி பிரதேசசபை செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு;

**முன்பள்ளி சொல்வளப் போட்டி**

முதலாமிடம் மூவர்

உ.கேனுஜா (வெள்ளாம் போக்கட்டி முன்பள்ளி), பி.சயந்திகா, பி.கீர்த்திகன் (நளினி முன்பள்ளி கொடிகாமம்),

இரண்டாமிடம் நால்வர்

ச.தினுஜன், ஜெ.அபிஷன் (கொடிகாமம் மத்திய முன்பள்ளி), து.சகீனா (வெள்ளாம் போக்கட்டி முன்பள்ளி), ர.டிலக்சிகா (கச்சாய் தெற்கு, கொடிகாமம்),

மூன்றாமிடம்

உ.தஜிந்தினி (நளினி முன்பள்ளி கொடிகாமம்)

**தரம் 1 சொல்வளப் போட்டி**

முதலாமிடம் இருவர்

நா. சாயிராம் (கச்சாய் அ.த.க.பாடசாலை), இ. திலக்ஷன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்)

இரண்டாமிடம் பா. அபிநயா (கச்சாய் அ.த.க. பாடசாலை)

**தரம் 2 சொல்வளப் போட்டி**

முதலாமிடம்

ச.சுலக்ஷனா (கொடிகாமம் அ.த.க.பாடசாலை)

இரண்டாமிடம் ஐவர்

ஜெ.பிரதிஷா (கச்சாய் அ.த.க. பாடசாலை), ஜெ.கஸ்மிதம் (அல்லாரை அ.த.க.பாடசாலை), ச.நிஷானி (கொடிகாமம் அ.த.க.பாடசாலை), வி.ஜேம்ஸ், உ.பிரதிஷா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்)

**தரம் 3 வாசிப்பு போட்டி**

ப.சோபிதா (அல்லாரை அ.த.க.பாடசாலை), அ.சானுஜா, அ. சாருஜா (கச்சாய் அ.த. க.பாடசாலை)

**தரம் 7 சித்திரப் போட்டி**

ம.மகிந்தன், கு.குவிந்தன், இ.அகிலன் (கச்சாய் அ.த.க.பாடசாலை)

**தரம் 8 சித்திரப் போட்டி**

ம.தனரூபன், க.புவிதரன், கை.நிறஞ்சன் (கச்சாய் அ.த.க.பாடசாலை)

**தரம் 9 சித்திரப் போட்டி**

ஜெ.றஜிக்குமார், க.கிருத்திகா, கு.சயந்தன் (கச்சாய் அ.த.க. பாடசாலை)

**தரம் 10 கட்டுரைப் போட்டி**

முதலாமிடம்

க.கலைவாணி (யா/க.அ.த.க. பாடசாலை)

இரண்டாமிடம்

இ. சஞ்ஜீவ் (யா/கொ.தி.மகா வித்தியாலயம்)

**தரம் 11 கட்டுரைப் போட்டி**

முதலாமிடம்

செ. ஆன்டனியா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்)

**தரம் 13 கட்டுரைப் போட்டி**

முதலாமிடம்

க.கஜந்தி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்). (ஸ்ரீ)

# இராசி பலன்

*01.11.2010*

*(ஐப்பசி 15 , திங்கட்கிழமை)*

*தசமி முன்னிரவு 9.58 மணிவரை*

*மகம் முன்னிரவு 7.26 மணிவரை*

*இராகுகாலம் 7.33-9.03 மணிவரை*

*சுபநேரம் 12.03-1.33 மணிவரை*

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகள் குடும்பப் பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** வாகன யோகத்தால் வளம் காணும் நாள், அஞ்சல் மூல்மாக ஆச்சரியமான தகவல் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பேரும், புகழும் கூடும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், குடும்ப பொறுப்புணர்ந்து செயற்படும் நாள், பொருளாதார நிலை உயர்வடையும், செல்வாக்கு மேலோங்கும்.

**கடகம்** இல்லம் தேடி இனிய செய்தி வந்து சேரும் நாள், நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**சிங்கம்** குடும்ப பொறுப்புக்கள் கூடலாம், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், திடீர் பயணம் அமையலாம், தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** அலைச்சல் அதிகரித்தாலும், ஆதாயம் பெறுவீர்கள், உறவினரை அனுசரிப்பதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும், சயன சுகக் குறையுண்டு.

**துலாம்** செல்வ நிலை உயரும் நாள், தொலை தூரப் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறலாம், குடும்ப உறவினர்களுடன் கலந்துரையாடும் நாள், முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொகை எதிர்பார்த்த இடத்திலிருந்து வந்து சேரும், விருந்தினர் வருகையுண்டு, பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

**தனுசு** தேகஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வீண்பழிகள் அகல விரைந்து முடிவெடுப்பீர்கள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பிரயாண அனுகூலமுண்டு.

**மகரம்** உடல் ரீதியாக உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, கௌரவக் குறைவாக நடந்து கொள்ளப்படலாம்.

**கும்பம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தினருக்காக பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரும்.

**மீனம்** நிர்வாகத்திறன் வெளிப்படும் நாள், எண்ணிய கருமங்களை உடனே செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிரிகள் உதிரியாகும் நாள்.

வளவன்

# வளவுகளை துப்புரவாக்கும் போது குண்டு வெடித்து மாணவன் படுகாயம்

## உருத்திரபுரத்தில் சம்பவம்

மக்கள் அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட பகுதியான உருத்திரபுரம் எள்ளுக்காட்டில் வளவுகளை துப்புரவு செய்து கொண்டிருந்தபோது குண்டொன்று வெடித்ததில் படுகாயமடைந்த மாணவனொருவன் கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளான். இச்சம்பவம் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது,

உருத்திரபுரம் எள்ளுக்காட்டில் மீளக்குடியேறியவர்கள் தமது வளவுகளை துப்புரவு செய்து கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சென்பற்றிமா பாடசாலையில் கல்வி கற்கும் ஜெனேந்தன் வயது (17) என்ற மாணவனே கைசிதறிய நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டான்.

தொடர்ந்து வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றான். இதேவேளை யுத்தத்தின் போது இவருடைய சகோதரர் உயிரிழந்தும் தந்தையார் ஒருகாலை இழந்தும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-84)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 80 | 110 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 60 | 70 | 70 |
| கரட் | 80 | 80 | 80 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 45 | 50 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 110 | 100 | 90 |
| பாகற்காய் | 140 | 150 | 130 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 70 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 80 | 90 | 90 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 70 | 50 |
| கறிமிளகாய் | 100 | 130 | 100 |
| முருங்கைக்காய் | 140 | 140 | 150 |
| போஞ்சி | 120 | 130 | 130 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |




என்.டி.பி.அவிவா காப்புறுதி நிறுவனத்தின் ஏற்பாட்டில் "மாணவர்களின் திறன்களையும் ஆற்றல்களையும் விருத்தி செய்தல்" எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு நேற்று யாழ்.பொது நூலக மண்டபத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலாநிதி க.குகதாசன் செயலமர்வு நிகழ்த்துவதையும் செயலமர்வில் பங்குபற்றிய வலிகாமம் கல்விக் கோட்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# மீள்குடியேறியோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த

# மீண்டுமொரு யுத்தம் நடத்த வேண்டியுள்ளது

## யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நடந்த யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டபோதிலும் மீள்குடிய மர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்த மீண்டுமோர் போர் நடத்த வேண்டி யுள்ளது என யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித் தார்.

522 ஆவது படைப்பிரிவின் தலைமை யதிகாரி மற்றும் அனைத்துதர படையதிகாரி கள் ஆகியோரின் ஏற்பாட்டில் கொமர்ஷல் வங்கியின் நிதியுதவியுடன் இலங்கை




இராணுவத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடு களை கையளிக்கும் நிகழ்வு நேற்று சாவ கச்சேரி கோயில் குடியிருப்பில் நடைபெற் றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் பேரீதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டு மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடிய மர்த்தப்பட்டு மக்களுக்கு புதிதாக வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதுவரை 650 வீடுகள் நிர்மாணிக்கப் பட்டு அதில் இரண்டு வீடுகள் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டது. அத்துடன் இக் குடும்பங்களின் தேவைக்காக 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது.

இன்றையநாளில் பாதிக்கப்பட்ட மக்க ளின் முகங்களில் புன்சிரிப்பை என்னால் காணமுடிகிறது. இத்தகைய மக்களுக்கு உதவி புரிய முன்வந்த கொமர்ஷல் வங்கி யினர்க்கு நன்றியைத் தெரிவித்துக்கொள் வதோடு ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தி னருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன் என அவர் கூறினார்.

இவர்களால் பெண்களுக்கான தையல் இயந்திரங்கள் நான்கு நேற்றைய தினம் வழங்கப்பட்டது.

மேலும் யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் துரித கதியில் நடைபெற்று வருவதோடு போரினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் வெகுவிரைவில் பூர்த்தியடைந்தவுடன் கையளிக்கும் நிகழ்வு நடைபெறும் என அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2-6)

## தமிழ்மொழி தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மகாஜனாக் கல்லூரியின் தமிழ் மொழித் தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் செல்வன் த.சுகுணராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யப்பான் கற்குசுயின் பல்கலைக்கழக முன் னாள் ஆய்வாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கலந்துகொண்டு சிறப்பிப் பர். (2)

## தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக் கான அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் நிரந்தர நியமனம் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதால் அனைத்து தொண் டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள் ளுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கத் தலை வர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பட்டப் பகலில் தக்கசமயம் பார்த்து சைக்கிள்களை அபகரிக்கும் திருடர்கள்

நெல்லியடி நகரப்பகுதியில் அண்மைக் காலமாக பட்டப் பகல் வேளையில் துவிச் சக்கரவண்டிகள் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நெல்லியடி நகரப் பகுதியில் தனியார் கடைகளுக்கு வரும் துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தமது தேவை கருதி துவிச் சக்கரவண்டிகளை கடைகளுக்கு முன் நிறுத்தி விட்டு செல்லும் வேளை அச்சமயம் பார்த்து திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டு கின்றனர்.

நேற்று நெல்லியடி மத்திய மகா வித்தி யாலய வீதியில் உள்ள கடை ஒன்றில் கரண வாய் பொன்னம்பல வித்தியாலய பாடசாலை யில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் தனது தேவை நிமித்தம் கடைக்குச் சென்றுவிட்டு திரும்பிவந்து துவிச்சக்கர வண்டியைப் பார்த்தபோது துவிச்சக்கர வண்டி களவாடப்பட்ட விடயம் தெரியவந்தது.

இதுபோன்ற சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதனால் பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறு கேட்டுகப்பட்டுள் ளது. (ஸ்ரீ-24)

# அலுவலக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அலுவலக உதவி யாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமி ருந்து கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி

க.பொ.த (சாதாரணம்) பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதுடன், விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 35 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத் தல் வேண்டும்.

மேற்குறித்த நியமனம் முழுநேர ஒருவருட காலத்திற்கான ஒப்பந்தமாக இருக்கும்.

விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் பெறுவதற்கு மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழக கிளையில் அல்லது நிதியாளரிடம் ஒவ்வொரு விண்ணப் பப் படிவத்திற்கும் ரூபா 100/- செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதி வாளர், கல்விசார் தாபனக்கிளை அலுவல கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)





வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகளில் 18 வயது ஆண்கள் பிரிவுக்கான போட்டியில் சம்பியனான பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் இரண்டாம் இடத்தைப் பெற்ற நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்:- கரவெட்டி செய்தியாளர்)

# புலம்பெயர் மக்கள் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்

## வரதராஜப் பெருமாள் வலியுறுத்து

(கொழும்பு)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி புலம்பெயர்ந்த தமிழர்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.ஈழத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கு இணைந்து செயற்பட வேண்டியது குறித்து அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்திய செய்திச் சேவை ஒன்றுக்கு தகவல் வழங்கியுள்ள கட்சியின் தலைவரும் வடக்கு- கிழக்கின் முன்னாள் முதலமைச்சருமான அண்ணாமலை வரதராஜப் பெருமாள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பாரிஸில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக ஆராயும் இரண்டு நாள் மாநாட்டை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கடந்த 23 ஆம் திகதி நடத்தியது.

இதில் லண்டன், பிரான்ஸ், ஜெர்மனி நாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.கனேடிய பிரதிநிதி பங்கேற்கவில்லை.

இந்த நிலையில் மாநாட்டின் பின்னர் லண்டனில் இருந்து கருத்துரைத்துள்ள வரதராஜப் பெருமாள் புலம்பெயர்ந்த மக்கள் பிரிந்திருந்து ஈழத்தமிழர்களுக்காக எவ்வித நலன்களையும் பெறமுடியாது.

எனவே அனைவரும் இணைந்து செயற்படவேண்டியது அவசியம் எனவும் தற்போதைய இலங்கையின் அரசியல் சூழ்நிலை ஈழத்தமிழர்களுக்கு சாதகமற்ற தன்மையைக் கொண்டிருக்கிறது.எனவே புலம்பெயர்ந்த தமிழர்கள் சில விட்டுக்கொடுப்புகளுக்கு முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி பணமோசடியில் ஈடுபட்ட பெண் கைது

(கொழும்பு)

ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி பணமோசடியில் ஈடுபட்ட 36வயதான பெண்ணொருவரை அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்மணி ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 40 பொது மக்களிடமிருந்து 10 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான தொகையைப் மோசடி செய்துள்ளார்.

தங்காலையைச் சேர்ந்த இப் பெண்மணி றாகம பகுதியிலிருந்து நீண்டகாலமாக இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண்மணி கைதுசெய்யப்படும் போது ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள், 32 இலட்சம் ரூபா பணம் மற்றும் போலிக் கடவுச்சீட்டு வைத்திருந்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையர் இருவருக்கு டுபாயில் மூன்று வருடச் சிறைத்தண்டனை

அலுவலகத்தில் இருந்து பெரும் தொகைப் பணத்தை திருடினர் என்கிற வழக்கில் டுபாய் நாட்டு நீதிமன்றம் ஒன்று இரு இலங்கையர்களுக்கு தலா மூன்று வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்க உத்தரவிட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் சாரதி இன்னொருவர் அலுவலக ஊழியர் ஆவார்கள். 20ஆயிரம் யூரோக்கள், 2இலட்சத்து 65 ஆயிரம் டிராம் ஆகியவற்றை திருடினர் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இருவரும் பணத்தை சுருட்டிக் கொண்டு இலங்கை திரும்பியிருக்கும் நிலையில் இவர்கள் இல்லாமலேயே வழக்கு இடம்பெற்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## வரவு - செலவுத் திட்டத்தில்

# வரி அறவீடு தொடர்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

அடுத்த அண்டு வரவு செலவுத் திட்டத்தில் வரி அறவீடு தொடர்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இம்மாதம் 22 ஆம் திகதி வரவு செலவுத் திட்ட யோசனை முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் வரி அறவீட்டு நடைமுறைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

சர்ச்சைக்குரிய பெறுமதி சேர் வரி அறவீட்டு முறையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப் படலாம் என எதிர்பார்க்கப்படுவதோடு மூன்று இலட்ச ரூபா தனிநபர் வருமான எல்லையை அதிகரிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி அடுத்த ஆண்டு முதல் மூன்று இலட்சத்தை விடவும் கூடுதலான வருமானத்தை ஈட்டுவோரிடமிருந்து அறவீடு செய்யும் வரியில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்; போகம்பரை சிறைச்சாலை கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

நீண்டகாலமாக துன்பங்களை அனுபவித்து வரும் எமக்கு தீர்வு தாருங்கள் என போகம்பரை சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 38பேர் அமைச்சர் டியூ குணசேகரவுக்கும் சிறைச்சாலை ஆணையாளருக்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கண்டி போகம்பரைச் சிறைச்சாலைகளுக்குள் நாம் மிகுந்த துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்.

குறிப்பாக ஏ.பி.சி ஆகிய மூன்று பிரிவுகளிலும் தான் சந்தேகத்தின் பேரில் மிக நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றோம்.

இந்தச் சிறைச்சாலையில் பயங்கரவாதம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மிக நீண்டகாலமாய் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளாகிய நாங்கள் சிறைச்சாலைக்குள் பலவிதமான துன்பங்களை அனுபவித்து வருகிறோம். இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ள 38பேரும் எங்களை ஏனைய கைதிகள் " புலி இப்போது அழிக்கப்பட்டு விட்டது" எனக் கூறி நாளாந்தம் அடித்து துன்புறுத்துகிறார்கள்.

இவ்விடயங்களை நாங்கள் அதிகாரிகளிடம் கூறினால் அவர்களும் சேர்ந்து எங்களுடன் வாக்குவாதம் செய்து எங்களை மேலும் தொந்தரவு செய்கிறார்கள்.

மேலும் நாங்கள் உண்பதற்கு உணவு கிடைப்பதில்லை, தண்ணீர் கிடைப்பதில்லை, மலசலகூடவசதிகள் கூட எங்களுக்கு இல்லை , எமது பெற்றோர் வடக்கு , கிழக்கு மற்றும் நாட்டின் தூர இடங்களில் இருந்து இங்கு வந்தால் எங்களைப் பார்ப்பதற்கு அவர்களை அனுமதிப்பதில் லை.

நாம் அனுபவிக்கும் இந்தக் கஷ்டங்களைப் பற்றி முறையிடுவதற்கு எந்தவொரு உயர்மட்ட அதிகாரியோ அல்லது அரசியல் தலைவர்களோ எம்மைப் பார்ப்பதற்கு இங்கு வருவதில்லை.

அண்மைய நாட்களில் இந்தப் பிரச்சினை மேலும் தீவிரமடைந்துள்ளது. எனவே இங்கு இருப்பதற்கு எமக்கு பாதுகாப்பு இல்லை. இதனால் எங்களைப் பாதுகாப்பான ஒரு இடத்தில் வையுங்கள். " உங்களைக் கொன்றுவிடுவோம்" என அச்சுறுத்தப்படுவதால் ஒவ்வொரு நாளும் நாங்கள் அனைவரும் மரண பயத்திலே வாழ்கிறோம்.

எமக்கு தனியான ஒரு இடத்தை தந்து எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள். தயவு செய்து எங்கள் பிரச்சினைகளை உங்கள் கவனத்தில் எடுத்து மேன்மை தங்கிய ஜனாதிபதியிடம் பரிந்துரை செய்து பிணையி லாவது விடுதலை செய்ய சிபார்சு செய்யுங்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# நுரைச்சோலை அனல் மின்நிலைய கட்டுமானப் பணியில் 1200 சீனர்கள்

(கொழும்பு)

இலங்கையின் உட்கட்டுமானப் பணிகளில் அதிகளவு சீனத்தொழிலாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். புத்தளம் மாவட்டம் நுரைச்சோலைப் பகுதியில் சீனா அமைத்து வரும் அனல் மின்நிலையப் பணிகளிலும் அதிகளவிலான சீனத் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

அங்கு ஆயிரத்து 200 சீனத் தொழிலாளர்களும் 500 சிங்களவர்களும் பணியாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே கடந்த வாரம் அங்கு இடம்பெற்ற தீவிபத்துக்கு சல்பர்டை ஒக்சைட் என்ற இரசாயனமே காரணமெனத் தெரிவித்துள்ள அரச தரப்பு இந்த விபத்தின்போது ஏற்பட்ட சேதங்களை சீனா பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ)




சத்ய சாய் மெடிக்கல் கிளினிக் & பார்மசி
(பருத்தித்துறை பஸ் டிப்போவிற்கு முன்பாக)
மருதடி, பிரதான வீதி, பருத்தித்துறை.

தினமும் காலை 7.30 மணியில் இருந்து இரவு 7.30 மணி வரை வைத்தியர் சேவையும், மருந்துகளும் பெற்றுக் கொள்ளலாம். இரத்தம், சலம் பரிசோதனைகள் , E.C.G வசதிகள் உண்டு. ஒவ்வொரு செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக் கிழமைகளில் விசேட பொது வைத்திய நிபுணர் (VP) சேவையும் மாதத்தில் இரு தடவைகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சத்திரசிகிச்சை, மகப்பேறு, தோல் வைத்திய நிபுணர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து வருகை தந்து நோயாளர்களைப் பார்வையிடுவார்கள்.

தாதிகளுக்கு வேலை வாய்ப்பு உண்டு.

தொடர்புகளுக்கு :-0773164251

(2782)





சாவகச்சேரி மீசாலைப் பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த நான்கு வீடுகள் அதன் உரிமையாளர்களிடம் நேற்றையதினம் சாவகச்சேரி கோயில் குடியிருப்பில் வைத்து கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் 52 படைப்பிரிவின் கட்டளைத்தளபதி கேமந்த பண்டார வீட்டு உரிமையாளரிடம் திறப்பினை கையளிப்பதை படத்தில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் சுயதொழில் பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மங்கல விளக்கேற்றுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் அமைச்சர் பயனாளிக்கு வாழ்வாதார உதவியாக நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

# போஷாக்கு குறைந்த சிறுவர்களுக்கு

# தூய பசும்பால் வழங்கும் திட்டம்

(கொழும்பு)

மஹிந்த சிந்தனையின் கீழ் சிறுவர் மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சினால் நாடளாவிய ரீதியில் போசாக்கு குறைந்த சிறுவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தூய பசும்பாலை அடுத்த ஆண்டு முதல் முன்பள்ளி, முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் மட்டும் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக சிறுவர் செயலகப் பணிப்பாளர் யமுனா பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் போசாக்கு குறைந்த இரண்டு வயது தொடக்கம் ஐந்து வயது வரையான சிறுவர்களுக்கு தூய பசும்பால் வழங்கும் திட்டம் நடைபெற்று வருகிறது.

பசும்பால் வழங்கும் திட்டம் தொடர்பாக கடந்த ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதியுடான திட்ட மீளாய்வு கலந்துரையாடலின் போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இப்புதிய தீர்மானத்திற்கு அமைய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள முன்பள்ளிகள் மற்றும் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் சிறுவர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களை நவம்பர் மாதம் 5 ஆம் திகதி க்கு முன்பதாக அனுப்பிவைக்க வேண்டுமென சகல பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும் சுற்று நிருப மூடாக அறிவிக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# ரிசானாவை விடுவிக்கக் கோரி மூதூரில் மகஜர் கைச்சாத்து

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கை பணிப்பெண் ரிஸானாவின் விடுதலையை வலியுறுத்தி திருகோணமலை, மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று காலை 9.30 மணியளவில் துவாப் பிரார்த்தனை நிகழ்வொன்று இடம்பெற்றது.

சுமார் 4ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் கலந்துகொண்ட இந்த பிரார்த்தனை நிகழ்வினை அடுத்து ரிஸானாவின் விடுதலையை வலியுறுத்தி மகஜர் ஒன்றும் கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# அரச காணிகளில் அத்துமீறி குடியிருப்பு; திருமலை, தீனோரியில் 30 வீடுகள் இடிப்பு

(கொழும்பு)


திருகோணமலை, கிண்ணியாப் பிரதேச சபைக்கு உட்பட்ட தீனோரி கிராமத்தில் அரச காணிகளில் அத்துமீறி நிர்மாணிக்கப்பட்டிருந்த சுமார் 30 தற்காலிக வீடுகள் பாதுகாப்புத் தரப்பினரால் நேற்றுக் காலை இடிக்கப்பட்டன.

குறித்த கிராமத்துக்கு நேற்று அதிகாலை சென்ற பொலிஸாரும் விமானப் படையினரும் மேற்படி தற்காலிக வீடுகளை இடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச காணிகளில் வீடுகளை நிர்மாணித்து அங்கு குடியிருந்த குடும்பங்களை அப்பகுதியில் இருந்து வெளியேறுமாறு அரசாங்க அதிகாரிகளினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் அங்கிருந்து வெளியேறாத பட்சத்தில் மேற்படி வீடுகள் உடைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# புலிகளின் சர்வதேச வலையமைப்பிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்-சிங்கள ஊடகமொன்றுக்கு நேர் காணல் வழங்கியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் பாரியளவிலான சொத்துக்களும் வலுவான தொடர்பாடல் வளங்களும் காணப்படுவதாகவும் இதனைப் பயன்படுத்தி நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் புதிய முயற்சிகளில் புலிகளின் சர்வதேச வலையமைப்பு ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆயுத போராட்டமொன்றை நடத்த முடியாது என்பதனை நன்கு உணர்ந்து கொண்டுள்ள புலிகளின் சர்வதேச வலையமைப்பு வேறுவழிகளில் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருவதாகவும் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்கும் சுற்றுலாத்துறையை வீழ்ச்சியடையச் செய்வதற்கும் புலிகள் முயற்சித்து வருவதாகவும் அவர் குறிப்பட்டுள்ளார்.

இதற்கு எதிராக அரசாங்கம் பல்வேறு வழிகளில் நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு வலுவாக இயங்கி வரும் நாடுகளிடம் இலங்கை தொடர்பில் எடுத்துரைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து இலங்கை இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதாகவும் பிரபாகரன் உயிருடன் இருந்த காலத்தைப் போன்றல்லாது தற்போது புலம்பெயர் தமிழர்களிடையே இலங்கை தொடர்பான எண்ணங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

யுத்த நீதிமன்றமொன்றினால் மரண தண்டனை கூட வழங்க முடியும் எனவும் இதனால் சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பு தவறானது என்ற வாதங்கள் அடிப்படையற்றவை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையின் அபிவிருத்திக்கு உதவியளிக்கப்படும்

## சுவீடன் பிரதமர் தெரிவிப்பு

போரின் காரணமாக பாதிப்படைந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக சுவீடன் அரசாங்கம் தமது ஆதரவினை வழங்க முன் வந்துள்ளது.

இந்தத் தகவலை சுவீடன் பிரதமர் பிரெட்ரிக் ரீ இன்பெஷல்ட் தெரிவித்துள்ளார்.

சுவீடனில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட அமைச்சரவைக்கும் வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கும் இடையேயான சந்திப்பொன்றின் போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)



அளவெட்டி வடக்கு அ.மி. த.க. பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற வாணி விழாவும் பரிசளிப்பு வைபவமும் நிகழ்வில் தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. கைலாசநாதனுக்கு வித்தியாலய முதல்வர் அ. இரங்கநாதன் மாலை அணிவித்து வரவேற்பதையும் மாணவர்களின் நடன நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

# உதுல் பிரேமரட்ண கைது செய்யப்பட்டமையானது மாணவர்களின் போராட்டத்தை சீர்குலைக்கும் முயற்சி

## ஒன்றியத்தின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாணவர்களின் போராட்டங்களை சீர்குலைக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளின் ஒரு நடவடிக்கையாகவே அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உதுல் பிரேமரட்ண கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஒன்றியத்தின் பேச்சாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி உயர் கல்வி அமைச்சுக்கு எதிரில் இடம்பெற்ற ஆர்ப்பாடத்தின் போது, அமைச்சின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவம் இடம்பெற்று இதுவரை காலம் ஏன் அவர் கைது செய்யப்படவில்லை என்பது குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

உதுல் பிரேமரட்ணவை கைது செய்வதற்கான உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு பொலிஸார் நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இந்த நிலையில், அவர் கைதுசெய்யப்பட்டமையானது மாணவர்களின் போராட்டத்தை சீர்குலைக்கும் நடவடிக்கையாகும்.

கல்வி தனியார்மயப்படுத்துவதற்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசியல் கட்சிகளை தெளிவுபடுத்தி, அதற்கு எதிராக பெரும் நிலைப்பாட்டை உருவாக்க மேற்கொண்டு வரும் செயற்பாடுகளை முடக்கவே அரசாங்கம் பிரேமரட்ணவை கைது செய்துள்ளது. (ஸ்ரீ-2)

# முதலுதவி விரிவுரையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல்

இலங்கை முதலுதவி சங்கத்தினால் கிளிநொச்சி வலயப் பாடசாலைகளிலுள்ள சகல முதலுதவி விரிவுரையாளர்களுக்குமான சந்திப்பு இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கிளி/கிளி நொச்சி மகா வித்தியால யத்தில் நடைபெறும்.

இச்சந்திப்பில் நியமனம் வழங்கல், எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள வருடாந்த அணிவகுப்பு தொடர்பாகவும், சீருடை நிதி சேகரிப்பு அட்டை சேகரித்தல் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்படவிருப்பதால் இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது சமூக மளிக்குமாறு இலங்கை முதலுதவிச் சங்க மாவட்ட ஆணையாளர் வி. மோகனதாஸ் அறிவித்துள்ளார்.

✠✠✠

இலங்கை முதலுதவி சங்கத்தினால் நடாத்தப்படும் முல்லை வலயப் பாடசாலை களின் சகல முதலுதவி விரிவுரையாளர் களுக்குமான சந்திப்பு எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு முல்லைத் தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இச்சந்திப்பில் நியமனம் வழங்கல், எதிர் வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை வரு டாந்த அணி வகுப்பு தொடர்பாகவும் சீருடை நிதி சேகரிப்பு அட்டை சேகரித்தல் மற்றும் ஏனைய விடயங்கள் ஆகியவை பற்றி கலந்தாலோசிக்க இருப்பதால் இதில் சம்பந்தப் பட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட முதலுவிச் சங்க மாவட்ட ஆணையாளர் வி. மோகனதாஸ் அறிவித் துள்ளார். (ஸ்ரீ-2)

# கொக்காவில் தொலைத்தொடர்பு கோபுர புனர்நிர்மாணப் பணிகள் பூர்த்தி

வன்னி கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுர புனர் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் அனுஷ பெலபிட்ட தெரிவித்துள்ளார்.

270 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கோபுரம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதாகவும் இந்தத் தொலைத் தொடர்பு கோபுரங்களின் மூலம் யாழ்ப்பாண பிரதேசத்திற்கு தேவையான தொலைத் தொடர்பு சேவை வசதிகளை வழங்கமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

172 மீற்றர் நீளமான கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுரம் இலங்கையின் மிக உயரமான தொலைத்தொடர்பு கோபுரமாகக் கருதப்படுகிறது.

தொலைக்காட்சி , வானொலி சேவைகள் ஊடக அமைச்சிடமும், ஏனைய தொலைபேசி உள்ளிட்ட தொடர்பாடல் சேவைகள் தொலைத்தொடர்பு ஆணையகத்திடம் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் இந்தக் கோபுரம் தகர்க்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இலங்கை சட்டவிரோத குடியேற்றவாசிகள் 61 பேர் தாய்லாந்து அதிகாரிகளால் கைது

இலங்கையை சேர்ந்த 61 சட்ட விரோத குடியேற்றவாசிகள் தாய்லாந்து அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தாய்லாந்தின் தென் மாகாணத்தில் உள் சொங்ஹாலா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது 114 பேர் கட்ந்த 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். தமது விசா காலாவதியான நிலையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக சொங்ஹாலா பிராந்திய குடிவரவு பாதுகாப்புத் துறை தலைவர் புட்திபோங் இதனை தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் மூன்றாம் நாடு ஒன்றுக்கு சட்டவிரோதமாக தப்பி செல்வதற்கு முயற்சித்து வந்தவர்கள் என சந்தேகிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதத்தில் மட்டும் தாய்லாந்து அதிகாரிகளினால் சட்ட விரோத குடியேற்றவாசிகள் 128 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



# 16 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

16ஆம் திகதியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் இரண்டு எண்களின் ஆதிக்கப் போராட்டத்தால் இரண்டு விதமான வாழ்க்கை நிலை அமையப் பெற்றிருக்கிறார்கள். இந்த திகதியில் பிறந்த பலர் திருமணத் திற்குமுன் சுமாரான வாழ்க்கையைப் பெறுபவர்களாக இருப்பதைக் காணலாம். பலர் வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொண்டு துன்பப்படுபவர்களாகவும் இருப்பார்கள். மனம் ஒரு செயலும் குணம் ஒரு செயலும் செய்யும் நிலையுடைய இவர்கள் பெரும்பாலும் பெண்களால் முன்னேற்றம் காண்பவர்களாகவும் இருப்பார்கள். இவர்களின் தொழில் எண்கள் 7, 9; தொழில் உதவி எண்கள் 1, 6.

அரசு ஊழியர்களில் மிகச் சிலரே உயர்ந்த பதவி வகிக்கும் நிலை இருக்கும். பெரும்பாலும் அடிக்கடி இடமாற்றம், அதிகாரிகளால் தொல்லை போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். மேலதிகாரிகளால் அதிக தொல்லையும் சங்கடமும் அடையக் கூடியவர்கள் இவர்களே. தொழில் எண்கள் 7, 9-ன் ஆதிக்கத்தைப் பொறுத்து இவர்களின் முன்னேற்றம் அமையும். தொழில் உதவி எண்ணும் பிறந்த திகதி எண்ணும் ஒரே எண்ணாக அமைவதால், எப்பொழுது நன்மை நடக்கும், எப்பொழுது தீமை நடக்கும் என்பதை அறிய முடியாத நிலை ஏற்படும். 1, 6-ஆம் எண்களின் ஆதிக்கம் மட்டும் இருந்தால் நல்ல வாழ்க்கை அமைந்து உயர்வுகள் கிடைக்கும். 7, 9-ஆம் எண்களின் ஆதிக்கம் மட்டும் உள்ளவர்களுக்குப் பெண்களால் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும். ஒரே சிந்தனை, ஒரே செயல் என்று செயற்பட்டால் வெற்றி பெறலாம். இவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் துர்க்கையை வணங்கி வந்தால் நன்மைகள் பல பெறலாம்.

16ஆம் திகதியில் பிறந்து சுயதொழில் புரிவோர் மிகச் சிலரே. இவர்கள் பெரும்பாலும் ஆன்மிகம் மற்றும் மறைமுகமாக நடைபெறும் வேலைகள், மின்சாரம், மின்னணு போன்ற துறைகளில் மிகப் பிரசித்தி பெற்றிருப்பார்கள். எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கும் தன்மை இவர்களிடம் இருப்பதைக் காணலாம். பெண்களால் பெருமை, சிறுமை இரண்டுமே கிடைக்கக் கூடும். பெண்களால் மிகப் பெரிய சரிவைச் சந்திக்கும் நிலையைக் கொடுக்கும் தன்மை 1, 6ஆம் எண்களுக்கு இருப்பதால், கவனமாக இருக்க வேண்டியது அவசியம். பெரும்பாலான நபர்களுக்கு தொழில் எண்கள் 7, 9இன் ஆதிக்கம் குறைவாக இருப்பதால், பிறந்த திகதி எண் 1, 6 மற்றும் 7ஆம் எண்களின் ஆதிக்கத்தைப் பொறுத்தே வாழ்க்கை முறை அமையும். வாழ்க்கை வளம் பெற ஞாயிறுதோறும் விநாயகருக்கு சிதறுகாய் அடித்து வணங்கி வந்தால் நன்மை உண்டாகும்.

16ஆம் திகதியில் பிறந்து தொழிலாளர்களாக இருப்பவர்கள் பெரும்பாலும் திருமணத்திற்குப் பின் கஷ்டங்களை அனுபவிக்கும் நிலையில் இருப்பதைக் காணலாம். திருமணத் திகதியும், மனைவியின் எண்ணும் சரியாக அமையப் பெற்றிருந்தால் மட்டுமே சிறிது சிறிதாக முன்னேறி உன்னதமான நிலையை அடையக்கூடும். சிலர் வாழ்வின் பிற்பகுதியில் நல்ல வாழ்க்கை வாழும் நிலை உண்டாகும். ஆரம்ப கால வாழ்க்கை சுமாராக அமைந்து திருமணத்திற்குப்பின் உயர்ந்தவர்களும் ஆரம்பத்தில் நல்ல வாழ்க்கை வாழ்ந்து திருமணத்திற்குப் பின் தாழ்ந்தவர்களும் அதிகமாக இருப்பதைக் காணலாம். இவர்களுக்கு தொழில் எண் ஆதிக்கமும் பிறந்த திகதி எண் ஆதிக்கமும் சமபலம் பெற்றிருப்பதால் பெரும்பாலானவர்கள் கடைசி வரை தொழிலாளர்களாகவே இருக்கும் நிலையும் உண்டாகும். (தொழில், நட்பு எண்ணும் பிறந்த திகதி எண்ணும் ஒரே எண் என்பதை அறிக) தொழில் எண் ஆதிக்கம் மட்டும் உள்ளவர்கள் நல்ல வேலை, நிரந்தர வருவாய் என்று வாழ்வைச் சீராக நடத்தும் நிலை இருக்கும். வாரம்தோறும் ஏதேனும் ஒரு கிழமையில் தொடர்ந்து ஐந்து முறை பிரம்மாவை நெய் தீபமேற்றி வணங்கி வந்தால் இன்னல்கள் குறைந்து இன்பம் கிடைக்கப் பெறலாம்.

கலை சம்பந்தப்பட்ட துறையில் இருப்போர் பெரும்பாலும் தலைமுறைத் தொழிலாளர்கள் அல்லது கலைஞர்களாக இருப்பார்கள். திடீரென கலை சம்பந்தப்பட்ட நபர்களின் தொடர்பால் முன்னேறும் வாய்ப்புகிடைக்கும். டெக்னிஸியன்களாகத் தொழில்புரிவோர் மற்றும் கதை, எடிட்டிங் போன்ற தொழில் செய்வோர் திடீர் திடீரென புதுமையைச் செய்து புகழ் பெறும் நிலை உண்டாகும். தெய்வ பக்தியால் மட்டுமே நல்ல பாதையை அமைத்துக் கொள்ளக்கூடிய நிலை உடையவர்களாவார்கள். தொழில் எண்களான7, 9இன் ஆதிக்கம் உள்ள கலைஞர்கள் புதிய தொழில்நுட்பம், புதிய அணுகுமுறை என்று உயர்வுபெறுவர். தொழில் நட்பு எண்களான 1, 6ஆம் எண்களின் ஆதிக்கம் பெற்றவர்கள் (பிறந்த திகதியும் 16) திறமையை வளர்த்துக் கொண்டு முன்னேறும் நிலையிலும் மிக உன்னதமான வருவாய் ஈட்டும் நிலையிலும் இருப்பதைக் காணலாம். வெள்ளிக்கிழமை தோறும் கலைவாணிக்கு வெண்தாமரை மலர் வைத்து வணங்கி வந்தால் நன்மைகள் பல பெறலாம்.

பிறந்த திகதி 16, விதி எண் 1ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் 16 ஆண்டுகள் நல்ல பலன்கள் கிடைக்கக் கூடும். பிறந்த திகதி 16, விதி எண் 2ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் 25 அல்லது 29 வயதிலிருந்து 28 ஆண்டுகள் நற்பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி 16, விதி எண் 3ஆக உள்ளவர்களுக்கு 29 ஆண்டுகள் நன்மையான பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி 16, விதி எண் 4ஆக உள்ளவர்களுக்கு 31 முதல் 34 ஆண்டுகள் நன்மைகள் கிடைக்கப் பெறுவார்கள். பிறந்த திகதி 16, விதி எண் 5ஆக உள்ளவர்கள் 20 வயது அல்லது 25 வயது முதல் தொடர்ச்சியாக நன்மைகளைப் பெறுவார்கள். பிறந்த திகதி 16, விதி எண் 6ஆக உள்ளவர்கள் 24 முதல் 33 ஆண்டுகள் நன்மைகள் பெறுவார்கள். பிறந்த திகதி 16, விதி எண் 7ஆக உள்ளவர்களுக்கு இடைவெளி விட்டு 7 ஆண்டுகள் நல்ல பலனும் 2 ஆண்டுகள் சுமாரான பலனுமாகத் தொடர்ச்சியாகப் பெறுவார்கள். பிறந்த திகதி 16, விதி எண் 8-ஆக உள்ளவர்கள் தொடர்ச்சியாக 17 ஆண்டுகள் நற்பலனைப் பெறுவார்கள். பிறந்த திகதி 16, விதி எண் 9ஆக உள்ளவர்கள் 25 ஆண்டுகள் நற்பலனைப் பெறுவார்கள்.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும். (தொடரும்)

**எஸ்.என்.ஹிரிஜி**

# மீள்குடியேறிய வடமராட்சி கிழக்கு மக்களுக்கு உரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்

## சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள மருதங்கேணி, செம்பியன் பற்று, தாளையடி,ஆழியவளை மற்றும் உடுத்துறை ஆகிய பகுதிகளுக்கு சென்ற அவர் அங்கு மீள்குடியேற்றப்பட்ட மக்களையும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் பாடசாலை அதிபர்களையும் ஆசிரியர்களையும் மற்றும் பொது மக்களையும் சந்தித்து உரையாடினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை, நாகர் கோயில், மருதங்கேணி வீதி திறக்கப்பட்டு, போக்குவரத்து நடைபெற்று ஒருசில நாட்களின் பின் மூடப்பட்டது.

இப் பாதையானது பருத்தித்துறையில் இருந்து நெடுங்கேணி வரை 20 கிலோமீற்றர் தூரத்திற்கு உட்பட்டதாகவே இருந்தது. தற்போது இம்மக்கள் ஏ-9 வீதி ஊடாக பளை மற்றும் புதுக்காட்டுச் சந்தியூடாகவே மருதங்கேணிக்குச் செல்கின்றனர். இதன் தூரம் 45 கிலோ மீற்றராகும். இதனால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கிறனர்.

அத்துடன் வடமராட்சி கிழக்குப் பகுதியில் 99 வீதமான வாழ்விடங்கள் பலத்த சேதத்திற்குள்ளாகி இருப்பதை காணக்கூடியதாக இருந்தது. மேலும் பல வீடுகள் தரைமட்டமாகி அத்திவாரம் மட்டுமே எஞ்சியுள்ளது.

தொடர்ந்து மருதங்கேணி வைத்தியசாலையை சென்று பார்வையிட்டபோது அவ் வைத்தியசாலை தற்காலிக கூடாரங்களில் இயங்குவதாகவும் நோயாளர் காவு வண்டி வசதிகள் ஏதும் கிடையாது. இதனால் கர்ப்பிணிப் பெண்கள், நோயாளர்கள் பலத்த சிரமத்தை எதிர்கொள்வதை உணரமுடிகிறது என்றும் தெரிவித்தார்.

மேலும் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான கடற்தொழில், விவசாயம் போன்ற தொழில்களில் ஈடுபடுவதற்கு போதிய அளவு உதவிகள் இம்மக்களுக்கு வழங்கப்படவில்லை.

இவ்வாறான பல நெருக்கடிகள் காரணமாக அரைவாசிப் பகுதி மக்களே மீள்குடியேறியுள்ளனர்.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, தேவில் மற்றும் சுண்டிக்குளம் போன்ற இடங்களில் மக்கள் இன்னமும் மீள்குடியேற அனுமதி வழங்கப்படாத நிலையில் உள்ளார்கள்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப் பாதையை மக்களின் சிரமத்தை கருத்திற் கொண்டு இலகுவாகப் பிரயாணிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அரசுக்கு எதிரான இணையங்களை முடக்குவதற்குத் தீர்மானம்

அரசாங்கத்திற்கு எதிரான இணையத் தளங்களை முடக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக ஆங்கில ஊடக மொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தினையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் விமர்சனம் செய்யும் இணையத் தளங்களே இவ்வாறு முடக்கப்படவுள்ளதாகவும் அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்ட சில இணைய தளங்கள் எவ்வித முன்னறிவித்தல் இன்றி ஏற்கனவே முடக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தொலைத்தொடர்பு கட்டுபாட்டு ஆணைக் குழுவினால் இந்தத் தடை அமுல்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக பிரசாரம் செய்த இணைய தளங்கள் முடக்கப்பட்டதாகவும் இரண்டாம் தவணையின் போது பாலியல் மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான இணைய தளங்கள் முடக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மீளக்குடியேறிய 630 குடும்பங்களுக்கு 22 மில்லியன் ரூபாய் கடனுதவி

## மத்திய வங்கி ஆளுநர் கையளிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி அஜித் நிவாட் கப்ரால் முதன்முறையாக யுத்தம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய உன்னிச்சைப் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார்.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி என்பன இணைந்து வழங்கிய 22 மில்லியன் ரூபாய் கடன் திட்ட நிதியினை 630 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பகிர்ந்தளித்தார். பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், இலங்கை வங்கி, மத்திய வங்கிகளின் உயர் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆடு, மாடு வளர்ப்பிற்கான கால்நடைகளும் வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களையும் ஆளுநர் வழங்கி வைத்தார். (ஸ்ரீ)

# விண்ணப்பம் கோரல்

## ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் 2010/2011 ஆம் கல்வி ஆண்டில் கலைப் பட்டப் பாட நெறி, விஞ்ஞானப் பட்டப் பாடநெறி ஆகியவற்றைத் தொடர்வதற்கு அரசாங்க, அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் பொது ஆங்கிலம் அல்லது ஆங்கில பாடத்துடன் கலை வெளிவாரிப் பரீட்சைகளில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்கள் மனித வள அபிவிருத்திக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்திரமுல்லை என்ற முகவரிக்கு எதிர்வரும் 16.11.2010 இற்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

## நில அளவைத் திணைக்கள தொழில்நுட்பவியலாளர் பதவி

நில அளவைத் திணைக்களத்தில், அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பகிரங்க போட்டிப் பரீட்சைக்கு காணி, காணி அபிவிருத்தி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் 90 வீதமான நியமனங்களுக்காக க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

இதில் ஒரே தடவையில் தமிழ், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட 5 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்களில்' சித்தியடைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் ஒரு வருட இலத்திரனியல் அல்லது எந்திரவியல் பயிற்சிநெறி யை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் 29.11.2010 ஆம் திகதிக்கு முன்னர் நில அளவையாளர் நாயகம், நில அளவைத்திணைக்களம், கிருல வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

## அச்சக அத்தியட்சகர் பதவி

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் அச்சகத்தில் அச்சக அத்தியட்சகர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் அச்சக சேவை ஒழுங்கு வசதிகளுக்கமைய தகைமையுடைய ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 12.11.2010 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பம் கோரல்களுக்கான மேலதிக விபரங்களை கடந்த 29.10.2010 வர்த்தமானி அறிவித்தலில் பார்வையிடலாம்.

# மலையக தமிழ்க் கட்சிகளை இணைத்துக் கொள்வது குறித்து இந்த வாரம் தீர்மானிக்கப்படும்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப் பில் மலையக தமிழ்க் கட்சிகளை இணைத்துக் கொள்வது குறித்து இந்தவாரத்தில் தீர்மானிக்கப்படும் என தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளை இணைத்துக் கொள்வது குறித்த யோசனைத் திட்டம் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள தாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாரத்தில் நடத்தப்படவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளை இணைத்துக்கொள்வது தொடர்பிலான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சில அரசியல் கட்சிகளின் தலைவர்களி னால் சமுகமளிக்க முடியாத காரணத்தினால் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப் பில் தற்போது வடக்கு-கிழக்கை பிரதிநிதித்து வப்படுத்தும் தமிழ்க் கட்சிகள் மட்டும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் சிறுபான்மை மக்களின் பிரச்சி னைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளையும் தமது கூட்டமைப்பில் இணைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சகல மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தீர்வுத் திட்டம் அமையப் பெறல் வேண்டும்

## இரா.சம்பந்தன் வலியுறுத்தல்

(கொழும்பு)

பிளவுபடாத ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஐக்கியமும், பௌதீக ஒருமைப்பாடும் கட்டிக்காக்கப்பட வேண்டுமென அவர் வுலியுறுத்தியுள்ளார். சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் அமையப் பெற வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீர்வுத்திட்டமொன்றை காண்பதற்காக அரசியல் நோக்கம் காணப்பட்டால், தீர்வினை எட்டுவது கடினமாகாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமை மிகவும் அவசியமானதென குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு தயார் என அவர் அறிவித்துள்ளார். சில தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுடன் ஏற்கனவே சந்திப்புக்களை நடத்தியுள்ள தாகவும் கூட்டாக இணைந்து செயற்படுவது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவத்துள்ளார்.

அடிப்படைக் கொள்கைகளிலிருந்து விடுபடாமல் அனைத்துக் கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதனை தாம் கேள்விப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்புப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்குமாறு தமது கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும், தாம் வெளிநாட்டிலிருந்த காரணத்தினால் இது குறித்து தீர்மானம் எடுக்க முடியவல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# 2010.11 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1520 - தென் அமெரிக்காவில் மகலன் நீரிணை மகலனால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1592- கொரியக் கடற்படையினர் பூசான் என்ற இடத்தில் மிகப்பெரும் ஜப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1604 - ஷேக்ஸ்பியரின் ஒத்தெல்லோ நாடகம் முதற்தடவையாக லண்டனில் அரங்கேறியது.
- 1611 -ஷேக்ஸ்பியரின் த டெம்ஞுபஸ்ட் நாடகம் முதற்தடவையாக லண்டனில் அரங்கேறியது.
- 1755 -போர்த்துக்கல், லிஸ்பன் நகரில் இடம்பெற்ற நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக 60ஆயிரம் - 90,000 பேர் வரைகொல்லப்பட்டனர்.
- 1805 - முதலாம் நெப்போலியன் ஆஸ்திரியாவை முற்றுகையிட்டான்.
- 1814 -நெப்போலியனின் பிரான்ஸ் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஐரோப்பாவின் எல்லைகளை மீளவரையும் பொருட்டு வியென்னா காங்கிரஸ் கூடியது.
- 1876 - நியூசிலாந்தின் மாகாண சபைகள் கலைக்கப்பட்டன.
- 1894 - ரஷ்யாவின் மூன்றாம் அலெக்சாண்டர் இறந்ததை அடுத்து இரண்டாம் நிக்கலஸ் மன்னனானான்.
- 1904 - இலங்கையின் வட மாகாணத்துக்கான தொடருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது. இது அநுராதபுரம் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.
- 1911 - இத்தாலிக்கும் துருக்கிக்கும் இடையில் இடம்பெற்ற போரில் முதற்தடவையாக விமானத்தில் இருந்து குண்டுகள் வீசப்பட்டன.
- 1914 - முதலாம் உலகப் போர்: சிலியில் ஜெர்மனியக் கடற்படையுடன் நடந்த மோதலில் பிரித்தானியக் கடற்படையினர் முதன் முதலில் தோல்வியடைந்தனர்.
- 1918 - மேற்கு உக்ரேன் ஆஸ்திரிய-ஹங்கேரிப் பேரரசிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1922 - ஒட்டோமான் பேரரசின் கடைசி சுல்தான் ஆறாம் மொகமட் பதவியிழந்தான்.
- 1928 - துருக்கிய மொழி சீர்திருத்தம் ஏற்பட்டது. அரபு எழுத்துக்கள் புதிய துருக்கிய எழுத்துக்களாக மாற்றப்பட்டன.
- 1948 - சீனாவின் மஞ்சூரியா என்ற இடத்தில் சீனக் கப்பல் வெடித்து மூழ்கியதில் 6ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1950 - புவேர்ட்டோ ரிக்கோ தேசியவாதிகள் அமெரிக்கத் தலைவர் ஹரி ட்ரூமனை கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியடைந்தது.
- 1951 - நெவாடாவில் அணுகுண்டு வெடிப்புச் சோதனையில் அமெரிக்கப் படைகள் ஈடுபடுத்தப்பட்டன.
- 1954 - புதுச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று இந்தியாவுடன் இணைந்தது.
- 1956 - நிசாம் என அழைக்கப்பட்ட பகுதி ஆந்திரப் பிரதேசம் என்ற மாநிலமாக்கப்பட்டது.
- 1956 - இந்தியாவில் மைசூர், கேரளம் மற்றும் மதராஸ் ஆகிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டன.
- 1957 - அக்காலத்தில் உலகின் மிக நீளமான தொங்கு பாலமான மக்கினாக் பாலம் அமைக்கப்பட்டது.
- 1970 - பிரான்சின் நடன மாளிகை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 144 பேர் கொல்லப்பட்டனர்.
- 1973 -மைசூர் மாநிலம் கர்நாடகா என மாற்றப்பட்டது.
- 1981 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து அன்டிகுவா பர்புடா விடுதலை பெற்றது.
- 1993 - ஐரோப்பிய ஒன்றியம் அமைப்பதற்கான மாஸ்ட்ரிக்ட் ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.
- 1998 - மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் அமைக்கப்பட்டது.
- 1999 - ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கையின் முதலாவது கட்டம் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1762-ஸ்பென்சர் பேர்சிவல், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் (இ. 1812)
- 1970 - கப்டன் மயூரன், விடுதலைப் புலிப் போராளி (இ. 1993)
- 1973 - ஐஸ்வர்யா ராய், இந்தியத் திரைப்பட நடிகை

### இறப்புகள்

- 1996 - ஜூனியஸ் ரிச்சட் ஜயவர்தனா, இலங்கையின் முதலாவது ஜனாதிபதி (பி.1906)



1959 - தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர் தியாகராஜ பாகவதர் இறந்தார் (பி. 1910)



யா/மகாஜனாக் கல்லூரியின் ஜயரத்தினம் நினைவு தினமும் கனிஷ்ட் பிரிவு மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் வைத்தியகலாநிதி து.இராசமுத்தையா நினைவுப் பேருரையாற்றுவதையும் திருமதி கௌரி சண்முகலிங்கன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பா.பாலமுரளி)

# இலங்கைச் சந்தைகளில் உலாவரும் போலி மருந்து மாத்திரைகள் !

(கொழும்பு)

இலங்கைச் சந்தையில் போலி மருந்து மாத்திரைகளின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அயல் நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் போலி மருந்து மாத்திரைகள் சட்ட விரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டு வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பாவி நோயாளிகள் உயிராபத்தை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

சில விலை குறைந்த மருந்துப் பொருட்கள் தரத்தில் மிகவும் குறைந்தவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மேனி அழகை மெருகூட்டுவதற்காக ஆண்கள் மற்றும் பெண்கள் பயன்படுத்தும் மருந்து மாத்திரைகள், கருத்தடை மாத்திரைகள் போன்றவை அதிகளவில் போலியானவை என சுட்டிக்காட்டப்படுகிறது.

சில தடைசெய்யப்பட்ட மருந்து மாத்திரைகள் இரகசியமான முறையில் இலங்கைச் சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதாகவும் வயகரா போன்ற மருந்து வகைகளில் அநேகமானவை போலி உற்பத்திகளே என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

செல்வந்த வர்த்தகர்கள் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போ்ற நாடுகளில் போலி மருந்து உற்பத்தியாளர்களிடம் பாரியளவில் கொள்வனவு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போலி மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கைக்கு விரைவில்

## ஜி.கே.வாசன் தெரிவிப்பு

தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என இந்திய மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

மன்னார்குடியில் செய்தியாளர்களிடம் மத்திய அமைச்சர் வாசன் உரையாற்றுகையில்,

தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையே பயணிகள் கப்பல் இயக்க இந்தியா- இலங்கை அதிகாரிகள் நிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை திருப்தி அளிப்பதாக உள்ளது.

இந்த பயணிகள் கப்பல் சேவை விரைவில் தொடங்கும்.

நாகையிலிருந்து சென்னைக்கும் சிங்கப்பூருக்கும் இடையே இயக்கப்பட்ட பயணிகள் கப்பல் சேவை போக்குவரத்து 1977 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. இதை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு மத்திய அரசுக்கு தங்கள் கருத்துக்களை அனுப்பினால் துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஸ்ரீ-2)

# மேலதிக இராணுவத்தினர் படையில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்

## இராணுவத்தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் சிப்பாய்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கப் போவதில்லை என இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

தற்போது படையினரின் எண்ணிக்கை சுமார் 2 இலட்சத்து 10 ஆயிரமாக உள்ளதாகவும் பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டு தாய் நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ள நிலையில் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்தார்.

இராணுவத்தில் வெற்றிடங்கள் ஏற்படும் பட்சத்தில் மட்டும் அவற்றை நிரப்புவதற்காக புதியவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பிற்காக மாத்திரம் அவசியமான அளவு படைத்தரப்பினரை தொடர்ந்தும் தக்க வைத்துள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# 70 கையடக்கத் தொலைபேசிகளை உடலில் மறைத்து கடத்திய இலங்கைப் பெண் கைது

(கொழும்பு)

கொழும்பில் இருந்து சென்னைக்கு கையடக்கத் தொலைபேசிகளை மறைத்து கடத்தி வந்த இலங்கைப் பெண்ணை் தமிழக சுங்க இலாகா அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு கொழும்பில் இருந்து ஒரு விமானம் வந்தது. இதில் வந்த பயணிகளை சுங்க இலாகா அதிகாரிகள் சோதனை இட்டனர். அப்போது இலங்கையை சேர்ந்த ரீ ஸ்வியா (வயது- 20) என்ற பெண்ணின் உடைகள் சந்தேகப்படும்படியாக இருந்ததால், அவரை சுங்க இலாக பெண் அதிகாரிகள் தனியறைக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினார்கள்.

அப்போது உடல் முழுவதும் கையடக்கத் தொலைபேசிகளை வைத்து செலோ டேப் மூலம் ஒட்டி வந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

அவரது உடலில் இருந்த 70 கையடக்கத் தொலைபேசிகளை அதிகாரிகள் கைப்பற்றினர்.

மேலும் அவருடைய சூட்கேசில் இருந்து உயர் ரக 3 சாட்டிலைட் கையடக்கத் தொலைபேசிகளையும் பறிமுதல் செய்தனர்.

இதுபற்றி விமான நிலைய சுங்க இலாகா ஆணையாளர் பெரியசாமி கூறுகையில்,

இலங்கை பெண் சாட்டிலைட் கையடக்கத் தொலைபேசியை கடத்தி வந்துள்ளார். இது தீவிரவாதிகள் பயன்படுத்துவதாகும். இந்தக் கையடக்கத் தொலைபேசி யாருக்காக கடத்தி வரப்பட்டது. இதன் பின்னணியில் உள்ளவர்கள் பற்றி விசாரணை நடத்த தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த 27ஆம் திகதி புறநகர் பொலிஸார் ரூ.2 கோடி நவரத்தின கற்களை பிடித்ததாகக் கூறி எங்களிடம் ஒப்படைத்தனர். இந்த கற்களின் மதிப்பு ரூ. 49 இலட்சம் தான் என்பது தெரிய வந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்த இது வரை விமான நிலைய சுங்க இலாகா மூலம் சுங்க தீர்வையாக ரூ. 2ஆயிரத்து 327 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் மட்டும் ரூ.422 கோடி சுங்க வரி வசூலிக்கப்பட்டது. இந்தியாவில் முதன் முறையாக இவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டுள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# ரிசானாவிற்கு மன்னிப்பு வழங்குமாறு இளவரசர் சார்ள்ஸ் கோரிக்கை

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் ரிசானாவிற்கு மன்னிப்பு வழங்குமாறு பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் சவுதி அரேபிய மன்னரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிசுவொன்றை படுகொலை செய்த குற்றத்திற்காக ரிசாணாவிற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றத் தண்டனையை தளர்த்துமாறு பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ், சவுதி அரேபிய மன்னரிடம் கோரியதாக வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச விவகாரங்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட தமக்கு அதிகாரமில்லை என பக்கிங்காம் மாளிகை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சார்ள்ஸ் இளவரசர் ரிசானாவிற்கு மன்னிப்புக் கோரினாரா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ரிசானாவிற்கு மன்னிப்பு வழங்குமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சவுதி மன்னரிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


ரிசானாவிற்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமெனக் கோரி இலங்கையின் பல பாகங்களிலும் வாழும் முஸ்லிம்கள் பிரார்த்தனைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தண்டனையை தளர்த்துமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் சவுதி அரேபிய மன்னரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஸ்ரீ-2)



விஜயதசமி தினத்தை முன்னிட்டு இணுவில் தெற்கு பெரிய கிணற்றடி வைரவர் ஆலயத்தில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா ஞான திருக்கேதீஸ்வரன் கபிலனுக்கு வித்தியாரம்பம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம்

# மிகக் குறைந்த வயதில் கிற்றார் மேதை; ஜப்பானியச் சிறுவன் கின்னஸ் சாதனை



இசையில் நல்ல ஞானம் கொண்டவர்கள் வாசிக்கும் கிற்றார் இசைக் கருவியை ஜப்பானிய சிறுவன் ஒருவன் 10 வயதிலேயே பலரும் வியக்கும் வண்ணம் வாசித்து கின்னஸில் இடம்பெற்றுள்ளான்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த யூட்டோ மியாசவா என்ற 10 வயதுச் சிறுவன் ஹொங்கொங்கில் உள்ள பிரபல கழகங்களில் கிற்றார் இசை நிகழ்ச்சியை நடத்தி வருகிறான். அவனது இசை நிகழ்ச்சியைப் பார்க்க பெரும் கூட்டமே கூடுகிறது.

இடம் கிடைக்காமல் நூற்றுக்கணக்கானோர் நின்ற படியே அவனது இசை நிகழ்ச்சியை ரசிக்கின்றனர். அவனுக்கென்று உருவாக்கியுள்ள ரசிகர் கூட்டம் சில குறிப்பிட்ட பாடல்களை திரும்பத் திரும்ப கேட்கிறது.

ஹொங்கொங் மட்டுமல்லாது சிக்காகோவில் கூட அவன் இசை நிகழ்ச்சியை நடத்தியுள்ளான். தவிர பல்வேறு தொலைக்காட்சி நிறுவனங்களும் அவனது இசை நிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்கின்றன.கிற்றார் இசைக்கருவியை வாசிப்பதில் மேதையாகத் திகழும் யூட்டோ மிகக் குறைந்த வயதில் ,தொழில்முறையில் கிற்றார் வாசிப்பாளர் என்ற பிரிவில் உலக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளான்.

இதுகுறித்து இவனது தந்தை சுனியோ மியாசவா கூறுகையில், என் மகன் மிகச் சிறிய வயதில் இசை நிகழ்ச்சிகளை நடத்துவதில் எங்களுக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது.யூட்டோ பிறந்து ஒன்றரை வயதில் கிற்றாரை கைகளால் தொட்டான்.பின் அவனது தாத்தா கிற்றார் பொம்மையை அவனுக்கு பிறந்தநாளின் போது பரிசளித்தார். அவனுடைய நான்காவது பிறந்த நாளில் இருந்து கிற்றார் பயிற்சி வகுப்புக்குப் போக ஆரம்பித்தான்.இப்போது உலகளவில் பிரபலமாகி கின்னஸிலும் இடம்பிடித்து எங்களுக்கு பெருமை சேர்த்து விட்டான் என்றார். (ஸ்ரீ)




# சுனாமியில் மாயமான 135 பேர் மீட்கப்பட்டனர்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் சுனாமியால் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டவர்களில் 135 பேர் மீட்கப்பட்டனர்.

இந்தோனேசியா சுமாத்ரா தீவு அருகே சமீபத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அங்குள்ள மென்டாவாய் தீவுகளை சுனாமி தாக்கியது.413 பேர் பலியாகினர்.198 பேரைக் காணவில்லை என அந்நாட்டு அரசு அறிவித்திருந்தது.

ஆனால் இவர்களில் 135 பேர் மென்டாவாய் தீவுக்கூட்டங்களில் ஒன்றான வடக்குப் பகாய் தீவிலுள்ள ஒரு மேட்டுப் பாங்கான பகுதியில் தங்கியிருந்தனர். அவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இது பற்றி இந்தோனேசிய பேரிடர் மேலாண்மை துறையின் அதிகாரி ஒருவர் கூறுகையில், மீட்கப்பட்டவர்கள் தங்கள் வீடுகளை விட்டு விட்டு காடுகள், மலைகளில் ஒளிந்து கொண்டிருந்தனர்.மீண்டும் தங்கள் கிராமங்களுக்குத் திரும்ப பயப்பட்டனர். மறுபடியும் சுனாமி தாக்கிவிடுமோ என அஞ்சினர் என்றார். (ஸ்ரீ)



போலந்து நாட்டின் தென்மேற்கு பகுதியில் உள்ள ஸ்வெய்போட்ஜின் என்ற இடத்தில் 16 மீற்றர் உயரமுள்ள குன்றின் மீது 35 மீற்றர் உயரத்தில் இயேசு கிறிஸ்து சிலை நிறுவுவதற்காக பணிகள் நடக்கின்றன. இச்சிலை நிறுவப்பட்டால் உலகில் உள்ள மற்ற இயேசு சிலைகளை விட இதுதான் மிகப் பெரியதாக இருக்கும்.

# 2010 ஆம் ஆண்டின் உலக அழகியாக அலெக்சாண்டிரியா மில்ஸ் தெரிவு




(சீனா)

அமெரிக்காவைச் சேர்ந்த அலெக்சாண்டிரியா மில்ஸ் 2010 ஆம் ஆண்டிற்கான உலக அழகியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாண்டிற்கான உலக அழகிப் போட்டி சீனாவின் சான்யா நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த 18 வயதான அலெக்சாண் டிரியா மில்ஸ் உலக அழகியாக தெரிவுசெய்யப்பட்டார்.

இரண்டாவது இடத்தை போட்ஸ்வானாவைச் சேர்ந்த எம்மா வாரசும் மூன்றாவது இடத்தை வெனிசுலாவைச் சேர்ந்த அட்ரியானா வாசினியும் பெற்றனர்.

உலகம் முழுவதிலும் இருந்து 119 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் பங்கேற்ற இந்தப் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்ற மானஸ்வி மாம்காய் 20 ஆவது இடத்தைப் பிடித்தார்.

உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அலெக்சாண்டிரியா மில்ஸ் கூறுகையில்,

மற்றவர்களின் வாழ்க்கையில் ஒருதாக்கத்தை ஏற்படுத்த விரும்புகிறேன். என்னால் முடிந்தவரை ஒவ்வொருவருக்கும் உதவ விரும்புகிறேன். மிஸ் வேர்ல்ட் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டது மிகப்பெரிய கௌரவம் என்றார். (ஸ்ரீ)



இந்தோனேசியா செல்மனில் உள்ள மெராபி எரிமலையானது நேற்று முன்தினம் காலை திடீரென புகைக்க ஆரம்பித்தது. இதனால் அப்பகுதி முழுவதும் சாம்பல் பரவிக்கிடக்கிறது.

# கால்பந்து மைதானத்தில் நடந்த துப்பாக்கி சூட்டில் 14 பேர் பலி

(தெகுசிகல்பா)

ஹொண்டுராஸ் நாட்டின் தெகுசிகல்பா பகுதிக்கு அருகே உள்ள கால்பந்து மைதானத்தில் நேற்று புகுந்த ஒருவன் அங்குள்ளவர்களை துப்பாக்கியால் சுட்டத்தில 14 பேர் கொல்லப்பட்டனர்.

இது குறித்து அந்நாட்டு பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் ஆர்மண்டோ கூறியதாவது,

கால்பந்து மைதானத்தில் விளையாட மறுத்ததன் எதிரொலியாக சம்பந்தப்பட்ட அவன் துப்பாக்கியால் சுட்டிருக்கலாம் என்று தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் அந்த இடத்திலேயே பத்து பேர் கொல்லப்பட்டனர். மற்ற 4 பேரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டனர். சம்பவம் குறித்து அங்குள்ள பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ)

# மியன்மார் நாட்டின் மீது செல்வாக்கு செலுத்தும் சீனா

மியன்மாரில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் யார் வெற்றிபெறுகிறார்களோ இல்லையோ அதன் அயல் நாடான சீனா வெல்லத்தான் போகிறது. ஆம், மியன்மார் ஆட்சியாளர்கள் சீனாவைத் தங்கள் பாதுகாப்புக்கான ஆதரவாளராக கருதத் தொடங்கிவிட்டனர்.

இந்தியாவைச் சுற்றியுள்ள ஒவ்வொரு நாட்டையும் தன் பக்கம் இழுத்து வருவதில் சீனா பெருமளவு வெற்றி பெற்று விட்டது. இந்தியா அல்லது அமெரிக்கா பக்கம் மியன்மார் சாய்ந்து விடக்கூடாது என்பதில் சீனா பெருமளவு கவனம் செலுத்தி வருகிறது.

ரஷ்யா, அமெரிக்கா இடையிலான பனிப்போரின் போது, மியன்மார் இராணுவ ஆட்சியாளர்கள் சீனாவின் ஆதரவுடன் மியன்மாரில் கிளர்ச்சி செய்து வந்த கம்யூனிஸ்டுக்களை ஒடுக்கினர்.அதன்பின் சீனாவுக்கு எதிராக மியன்மாரில் நடந்த கிளர்ச்சிகள், 1967 இல் சீனா, மியன்மாரிலுள்ள உள்ள தன் தூதரகத்தை இழுத்து மூடியது என இருதரப்பும் எதிர் எதிராகவே இருந்தன.

இருந்த போதும் மியன்மாரில் ஆதரவுக் கரம் நீட்டுவதற்கு அமெரிக்கா அல்லது ஐரோப்பிய நாடுகளுக்கு சிறிதளவே வாய்ப்பு இருந்தது. ஆனால், அடுத்து வந்த மியான்மார் ஆட்சியாளர்கள் சீனா பக்கம் சாயத் தொடங்கினர்.

இது குறித்து லண்டன் பொருளாதரா பள்ளியின் மியன்மார் அரசியல் நிபுணர் மவுங் ஜார்னி கூறுகையில்,

சர்வதேச அளவில் தங்கள் பாதுகாப்புக்காக சீனாவை மியன்மார்மியர் விரும்புகின்றனர். மியன்மாரில் கிடைக்கும் மூலப் பொருட்களுக்காக சீனர்கள் மியன்மாரை விரும்புகின்றனர். அத்துடன் இந்தியப் பெருங்கடல் பகுதியில் அரசியல் ரீதியில் சீனாவுக்கு பர்மா பலமாக இருக்கும்.யார் ஆட்சிக்கு வந்தாலும் இந்நிலைமை மாறப் போவதில்லை என்று குறிப்பிட்டார். (ஸ்ரீ)

# இந்தியா- கிழக்காசிய நாடுகளுக்கிடையில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் அவசியம்

## இந்தியப் பிரதமர் வலியுறுத்து


(ஹனோய்)

இந்தியாவுக்கும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளாளர்.

வியட்நாமின் ஹனோய் நகரில் நடந்த இந்தியா- ஏசியான் உச்சிமாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் பேசியதாவது, இந்தியாவுக்கும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பு மிகவும் அவசியம்.

குறிப்பாக கிழக்காசிய நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்பதில் இந்தியா ஆர்வமாக உள்ளது.பணிகள் மற்றும் முதலீடு தொடர்பான துறைகளில் இந்த ஒப்பந்தம் அவசியம்.இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி எதிர்வரும் ஆண்டுகளில் ஒன்பது முதல் 10 சதவீதத்தை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.இதன்மூலம் ஆசிய நாடுகள் அனைத்தும் இந்தியாவில் வர்த்தகத் துறைகளில் அதிக முதலீடு செய்வதற்கான வாய்ப்பு உருவாகும்.

இந்தியாவில் எனது தலைமையிலான மத்திய அரசு கிராமப்புறங்களில் ஏராளமான திட்டப் பணிகளை அமுல்படுத்தி வருகிறது. இதன் மூலம் கிராமப்புற சந்தை பெரியளவில் வளர்ச்சியடைவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆசிய நாடுகளுக்கு இடையே தொடர்புகள் அதிகரிக்கப்பட வேண்டும்.



அதேபோல் அறிவியல், தொழில்நுட்பம் பாதுகாப்பு, கல்வித் துறைகளில் ஆசிய நாடுகள் ஒருங்கிணைந்து செயற்படுவதும் மிக வும் அவசியமான ஒன்று. இவ்வாறு பிரதமர் பேசினார். (ஸ்ரீ)

# படகு கவிழ்ந்து 18 பேர் பலி

(கொல்கத்தா)

மேற்கு வங்கத்தில், ஹுக்ளி நதியில் படகு கவிழ்ந்ததில்,18 பேர் பலியாகினர். மேற்கு வங்கத்தில், கிழக்கு மிட்னாபூரின் ஹிஜ்லி ஷரிப் பகுதியில் இருந்து தெற்கு பர்கானா மாவட்டத்தில் உள்ள காக்துவிப் என்ற இடத்திற்கு நேற்று முன்தினம் ஏராளமான பயணிகள் படகில் சென்றனர். இப்படகு, ஹுக்ளி நதியில் சென்றபோது, தல்பாத்தி தீவு அருகே திடீரென கவிழ்ந்தது.

இதில், தண்ணீரில் மூழ்கி 15 பெண்கள், மூன்று குழந்தைகள் உட்பட 18 பேர் பலியாகினர்.

படகில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பயணம் செய்துள்ளனர்.45 பேர் மீட்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

# ஒபாமாவின் இந்திய விஜயத்தை இடதுசாரிகள் எதிர்ப்பதா ?

## வைகோ கண்டனம்



(சென்னை)

அமெரிக்க குடியரசுத் தலைவர் பராக் ஒபாமாவின் இந்திய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இம்மாதம் 8ஆம் திகதியன்று நாடுமுழுவதும் இடதுசாரிக் கட்சிகள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக செய்துள்ள அறிவிப்பு அதிர்ச்சியையும் மிக வேதனையையும் தருவதாக ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கறுப்பர்கள் நடத்திய போராட்டப் பயணத்தில் உலகம் போற்றும் ஒரு கறுப்பு இனத்து தந்தையின் மகனாகப் பிறந்த பராக் ஒபாமா அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவர் ஆகியுள்ளார்.

இந்திய தேசப்பிதா என்று போற்றப்படும் அண்ணல் காந்தியாரை மனித குலத்தின் ஒளிவிளக்காக போற்றுகின்ற ஒபாமா , தன் அலுவலக அறையில் காந்தி படத்தையும் வைத்துள்ளார். ஒடுக்கப்பட்ட இனத்தில் இருந்து வந்துள்ள ஒபாமாவை, இந்திய மக்கள் வாழ்த்தி வரவேற்க கடமைப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இடதுசாரிக் கட்சிகள், அமெரிக்காவின் கொள்கைகள் இந்திய மக்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியவை என்பதால், ஒபாமாவை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் எனக்கூறி உள்ளன.

ஒபாமா, தனது தேர்தல் பிரசாரத்தில் கொடுத்த வாக்குறுதியின்படி, ஈராக்கில் இருந்து பெருமளவு அமெரிக்க படைகளை திரும்பப் பெற ஆணை பிறப்பித்துள்ளார். மீதம் உள்ள ஐம்பதாயிரம் பேரும், அடுத்த ஆண்டு இறுதிக்கு உள்ளாகத் திரும்ப அழைக்கப்படுவர் என்று உறுதி வழங்கியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதிக்கு ஆவேசமான எதிர்ப்பைக் காட்டும் இடதுசாரிகளுக்கு ஒரு கேள்வியாக இந்தியாவின் ஒரு பகுதியான அருணாசல பிரதேசத்தை இந்திய பகுதியாக ஏற்றுக் கொள்ளாமல் தங்கள் பகுதி என்று வரைபடம் வெளியிடுகின்ற சீன அரசைக் கண்டித்து போராட்டம் நடத்தியது உண்டா? இலங்கையில் இலட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவிக்க சீன அரசும் ஆயுதங்கள் வழங்கியதே அதை இடதுசாரிகள் கண்டித்தார் களா? இலங்கையில் தமிழர்கள் படுகொலைக்கு ஆளானபோது, தனது நாடு விடுதலைப் புலிகளை தடை செய்து இருந்த போதிலும் ஒபாமா, போரை நிறுத்தச் சொல்லி மூன்று முறை குரல் கொடுத்தார்.

முள்ளிவாய்க்கால் கொடூரம் நிகழ இருந்த நேரத்தில் இலங்கையில் தமிழர்களுக்கு பெரும் அவலம் நேருகிறது என்று வேதனையோடு ஒபாமா அறிவித்ததையும் தமிழர்கள் மறந்துவிடமாட்டார்கள்.

கறுப்பு இனத்தில் இருந்து வெள்ளை மாளிகை ஜனாதிபதியாகி உள்ள ஒபாமாவை இந்தியநாட்டின் கோடானு கோடி மக்களும் கட்சி, மத எல்லைகளை கடந்து வாழ்த்தி வரவேற்க வேண்டுகிறேன். இடதுசாரிகள், தங்கள் போராட்ட அறிவிப்பை திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன் என வைகோ கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

## காஷ்மீரில் பிரிவினைவாத அமைப்புகள் சார்பில் முழு அடைப்பு போராட்டம்

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் பிரிவினைவாத அமைப்புகள் சார்பில், நேற்றுமுன்தினம் முழு அடைப்புப் போராட்டம் நடந்ததால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில், கடந்த ஜுன் மாதம் முதல் வன்முறைச் சம்பவங்கள் நடந்து வருகின்றன. இதனால், அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வருகிறது.

பாதுகாப்புப் படையினரும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். தற்போது, இயல்பு நிலை திரும்ப ஆரம்பித்துள்ளதை அடுத்து, அங்கு ஊரடங்கு உத்தரவு முற்றிலும் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்நிலையி[illegible] முன்தினம் பிரிவினைவாத அமை[illegible]புகள் சார்பில், முழு [illegible]அடைப்புப் பேராட்டத்திற்கு அழை[illegible]ப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதனால் பதற்ற[illegible]ம் நிறைந்த பகுதிகளான பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள டெலினா, பல்ஹாலன் மற்று[illegible]ம் பண்டிபூரா ஆகிய மூன்று நகரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஸ்ரீநகர் உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், முழு அடைப்பு காரணமாக, வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள், கடைகள் உள்ளிட்டவை அடைக்கப்பட்டிருந்தன.

வாகனப் போக்குவரத்தும் முற்றிலும் முடங்கியது. இதனால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதனிடையே மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் இரண்டு நாள் பயணமாக, நேற்று முன்தினம் காஷ்மீர் புறப்பட்டுச் சென்றார். காஷ்மீரில் மழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட லே பகுதிக்குச் சென்று, அங்கு மேற்கொள்ளப்படும் சீரமைப்புப் பணிகளை பார்வையிட்டு, அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

மாநில முதல்வர் ஒமர் அப்துல்லாவை சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அதைத் தொ[illegible]லைப் பகுதியான கார்கில் பகு[illegible]ச் சென்று பார்வையிட உள்ளதாக அரசு வட்டாரங்கள தெரிவித்துள்ளன. (ஸ்ரீ-2)

## 32 இந்திய மீனவர்கள் பாக். அதிகாரிகளால் கைது

(இஸ்லாமாபாத்)

கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 32 இந்திய மீனவர்களை, அத்துமீறி பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்ததாக கூறி அந்நாட்டு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.


இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் பாகிஸ்தானின் மாரி டைம் எல்லைக்குள் 50 மைல் தூரம் நுழைந்துவிட்டதாக அப்பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தோர் தெரிவித்தனர்.

இதனையடுத்து, மீனவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, கராச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கு வைத்து அவர்களின் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையே, மாரி டைம் எல்லையைத் தாண்டுவதாகக் கூறி இந்தியாவும், பாகிஸ்தானும் அவ்வப்போது மீனவர்களை கைது செய்வதும், தண்டனைக்காலம் முடிந்தும் மீனவர்கள் வருடக் கணக்கில் சிறையில் வாடுவது வழக்கம்.

முன்னதாக, பாகிஸ்தான் சிறைகளில் வாடும் இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று 2 தொண்டு நிறுவனங்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தன. இதையடுத்து, பாகிஸ்தான் 442 இந்திய மீனவர்களை விடுதலை செய்தது.

அண்மையில் கராச்சியில் உள்ள நீதிமன்றம் மேலும் 142 மீனவர்களை விடுவிக்குமாறு உத்தரவிட்டுள்ளது. இந் நிலையில் இந்திய மீனவர்கள் பாகிஸ்தா னால் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



தீபாவளி என்பது இலட்சுமியை வரவேற்கவும் வணங்கவுமான பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. குஜராத், அகமதாபாத்தில் விற்பனைக்காக லட்சுமி சிலை தயாரிக்கும் பெண்ணொருவரைப் படத்தில் காணலாம்.

அவன் போறான் குடிகாரன்
எனக்கு ஊத்தடி கள்ளை. ~ தமிழ்ப்பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பூசணிக்காய்க் கறிக்கு கருவாட்டுத் துண்டு

மரக்கறிச் சாப்பாடு என்றாலே வெறுப்பு என்ற மனநிலை பலருக்கு உண்டு. இதனால் மீன் சாப்பாடு எப்படியும் செய்தாக வேண்டும் என்ற கட்டாயத்தில் குடும்பப் பெண்கள் பலர் இருப்பதை மறுத்துவிடமுடியாது.

சில ஊர்களில் கடலுணவுக்குப் பெரும் பஞ்சம். சில காலங்களில் கடலுணவு கிடைப்பதும் இல்லை.

இந்நிலைமையில் மாமிசம் இல்லாமல் சாப்பிட முடியாதென்ற மனநிலை உள்ளவர்களை சமாளிப்பதற்கும் ஒரு நடைமுறை உண்டு.

அதுதான் பூசணிக்காய்க் கறிக்குள் கருவாட்டுத் துண்டுகளைப் போடுவது.

அடேங்கப்பா! கருவாட்டு மணம், இடையிடையே கருவாட்டுத் துண்டுகள். பூசணிக்காய் கறியும் மணம் குணம். மாமிச வேட்கைக்கு அது போதும். ஒரு பிடி பிடித்துவிடும் சம்பிரதாயமும் எமக்குப் பழக்கப்பட்டவையே.

அட! இதெல்லாம் எதற்கு! என்று நீங்கள் கேட்கலாம். இங்குதான் நல்லூரில் சைவ ஹோட்டல் அமைக்கும் திட்டம் பொருந்துகிறது.

அதாவது முதலில் ஹோட்டல் கட்டுதென்று முடிபு. பின்னர் அதற்குப் பலரும் எதிர்ப்பு. ஐயா! நல்லூர்க் கந்தக்கோட்டம் அமைந்துள்ள திவ்ய ஷேத்திரத்தில் விடுதியா? என்று பலரும் ஏங்கிக் கொள்ள,

நேற்று முன்தினம் ஒரு கூட்டம். கூட்டத்தில் பல்வேறு கருத்துக்கள். முடிவு சைவ ஹோட்டல் என்ற சொற்பதத்தோடு யாத்திரிகர் விடுதி என்ற நாமம் சூட்டி கட்டுவதென்பதாயிற்று.

நல்லூர் முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் யாத்திரிகர் விடுதி கட்டுவது நல்லது என்ற கருத்தியலை நாம் எதிர்க்கவில்லை.

ஆனால் நல்லூரில் யாத்திரிகர் விடுதி கட்டினால் அங்கு வருடம் முழுவதும் ஆட்கள் வருவார்களா? அவ்வாறு வருவார்கள் எனில் அவர்கள் யார்? இந்தக் கேள்விகள் எழுந்தால் எல்லாவற்றுக்கும் தீர்வு கிடைக்கும்.

அதாவது நல்லூர் மஹோற்சவ காலத்தில் மட்டுமே எம்மவர்கள் வெளிநாடுகளில் இருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும் இங்கு வருவார்கள். அங்ஙனம் வருபவர்கள் தங்கள் உறவினர்கள் வீடுகளில் தங்குவர்.

எனவே நல்லூர் மஹோற்சவ காலத்தில் மட்டும் தங்கக்கூடிய ஒரு சில யாத்திரிகர்களுக்காக ஐந்து நட்சத்திர யாத்திரிகர் மடத்தைக் கட்டுவது பொருத்தமானதா?

யாத்திரிகர் மடம் நட்டத்தில் இயங்குகிறது. எனவே அரை, கால் சட்டை அணிந்தவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பின்பு அவர்களுக்கு மரக்கறி பிடிக்கவில்லையாம்.

அட! பூசணிக்காய்க் கறிக்குள் இரண்டு கருவாட்டுத்துண்டைப் போடு. இதுவே யாத்திரிகர் மடத்தில் நடக்கும்.

பொறுப்பான நிறுவனங்கள் பொறுப்பற்ற வேலையில் இறங்கக்கூடாது.

நல்லூரில் யாத்திரிகர் விடுதிக்கு இப்போது அவசரம் எதுவும் இல்லை. எனவே இந்த சிந்தனையுள்ள நிறுவனங்கள் குறைந்தது இன்னும் 3 வருடங்கள் கழித்து இங்கு வரட்டும்.

அப்போது இருக்கின்ற களநிலையை வைத்து கூட்டம் போட்டு முடிவெடுக்கலாம்.

இதைவிடுத்து பூசணிக்காய்க் கறிக்கு கருவாடு போடும் வேலைகள் எதுவும் வேண்டாம்.

# முல்லை மீனவர்களின் வலைகளை சேதப்படுத்தும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள்

## தடுத்துநிறுத்துமாறு மீள்குடியேற்ற பிரதியமைச்சரிடம் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றப்பட்டுள்ள மீனவர்கள் கடலுக்குள் தடைகளின்றி சென்று மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் பெரும் எண்ணிக்கையில் அத்துமீறி வருகின்ற இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளினால் தமது வலைகள் சேதமாக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அத்துமீறி கரையோரம் வரையில் வந்து மீன்பிடிக்கின்ற இந்திய மீனவர்களின் வருகையைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முல்லைத்தீவு மீனவர்கள், மீள்குடியேற்றப்பிரதியமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அது தொடர்பில் முல்லைத்தீவு மீனவர்கள் தெரிவித்ததாவது,

யுத்தமோதல்கள் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக அனைத்தையுமிழந்து வெறும் கையுடன் சொந்தஇடங்களுக்கு திரும்பியுள்ள மீனவர்களுக்கு சுயதொழில் முயற்சிக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவிகளைக் கொண்டு ஒருசில வலைகளை வாங்கி தொழில் செய்யத்தொடங்கியுள்ளவேளையில் இந்திய மீனவர்கள் தமது இழுவைப் படகுகளில் வந்து வலைகளைச் சேதப்படுத்தினால் நாங்கள் எவ்வாறு சீவியம் நடத்தமுடியும்!

இந்திய மீனவர்கள் முல்லைத்தீவுக் கடற்கரை வரையிலும் வந்து மீன்பிடிப்பதில் ஈடுபட்டுள்ளபோதிலும் கடற்படையினரோ அல்லது இராணுவத்தினரோ எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது கவலையளிப்பதாகவுள்ளது.

எனவே இவ்விடயத்தில் விரைந்து நடவடிக்கையெடுத்து இந்திய மீனவர்களின் வருகையைத் தடுத்து நிறுத்த வேண்டுமென அவர்கள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தவிடயம் குறித்து முல்லைத்தீவு செயலகத்தில் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளினால் மீள்குடியேற்றப் பிரதியமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுவிடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்து இந்தியாவுடன் பேச்சுக்கள் நடத்தி நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதாக பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார். (ந-5)

# மரணதண்டனை விதிக்கப்பட்ட ரிசானாவுக்காக மூதூரில் பிரார்த்தனை

(திருகோணமலை)

சவுதி அரோபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கும் நிசானா நபீக்கிற்கு விடுதலைகிடைக்க வேண்டி மூதூர்ப்பகுதியில் கூட்டுப் பிரார்த்தனைகள் இடம்பெற்றுள்ளன.

சவுதியில் பணிப் பெண்ணாகக் கடமை புரிவதற்காகச் சென்ற ரிசானா நபீக் குழந்தை ஒன்றுக்கு பாலூட்டிய போது அக் குழந்தை இறந்ததாக இவர் மீது குற்றச்சாட்டப்பட்ட வேளையில் அவருக்கு சவுதி அரேபிய நீதிமன்றம் மரணதண்டனையை உறுதிசெய்தது.

இதையடுத்து மன்னிப்பு வழங்குமாறு சர்வதேச மட்டத்திலும் கோரிக்கைகள் விடப்பட்டன.

சர்வதேசமனித உரிமைகள் அமைப்பு இத்தண்டனையை மீள் பரிசீலனை செய்யுமாறு கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் சவுதி அரேபிய அரசாங்கத்திடம் மரணதண்டனை மீள்பரிசீலணை செய்யுமாறு தனது பரிந்துரைகள் உள்ளிட்ட கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

தற்பொழுது இவரின் தீர்ப்பினை மீள் பரிசீலனை செய்வதாக மூதூர் பிரதேச மக்கள் தமது கையெழுத்துக்கள் அடங்கிய கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

எனினும் சவுதி அரேபிய அரசாங்கம் இது தொடர்பில் எந்தவிதமான கருத்துவெளிப்பாடுகளையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7)

# மன்னாரில் வடமாகாண ஆங்கிலதினப் போட்டிகள்

(மன்னார்)

வடக்குமாகாண ஆங்கிலதினப் போட்டிகள் இன்றும் நாளையும் மன்னார் சென்.சேவியர் பெண்கள் பாடசாலையில் நடைபெறுகிறது.

வடக்குமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பங்குபற்றும் யாழ்ப்பாண, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்கள் நேற்று மன்னார் சென்றடைந்துள்ளனர். (ந-5)

# தேசிய தமிழ் மொழித்தின விழா கொழும்பில் 13,14ஆம் திகதிகளில்

(கொழும்பு)

தேசியமட்ட தமிழ்மொழித்தின விழா எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெறுகின்றது.

இதுதொடர்பில் கல்வியமைச்சின் தமிழ்மொழிப்பிரிவு அறிவித்துள்ளதாவது,

2010 ஆம் ஆண்டிற்கான தேசிய மட்ட தமிழ்மொழித்தின எழுத்தாக்கல் போட்டிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பில் நடைபெறுகின்றது.

அத்துடன் தமிழ்மொழிதினவிழா எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரியிலும், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும் நடைபெறும். எனவே போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் மேற்படி திகதிகளில் உரிய நேரத்துக்கு சமுகமளிக்கவேண்டும். இவ்வாறு கல்வியமைச்சின் தமிழ்மொழிப்பிரிவு அறிவித்துள்ளது. (ந-5)

# விபத்தில் படுகாயம்

(கரவெட்டி)

அல்வாய் பகுதியில் உழவு இயந்திரமும் துவிச்சக்கரவண்டியும் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தநிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 7 மணியளவில் அல்வாய் தெற்கு வதிரிச் சந்தியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த மோகனதாஸ் சிந்துஜன் (வயது 20) என்பவரே படுகாயமடைந்தார். (ந-7)

# சுவாமி விவேகானந்தரின்

## சிக்காக்கோ சொற்பொழிவுகள்



ஸ்ரீ கிருஷ்ணனின் சீடர்களுள் ஒருவர், பாரதத்தின் அன்றைய சக்கரவர்த்தியாக விளங்கிய யுதிஷ்டிரர். அவர் பகைவர்களால் நாட்டிலிருந்து விரட்டப்பட்டு,மனைவியுடன் இமயமலைக் காட்டில் வசிக்க நேர்ந்தது. ஒருநாள் அரசி யுதிஷ்டிரரிடம், ‘அறத்தில் மிகச் சிறந்து விளங்கும் உங்களுக்கும் ஏன் துன்பம் வரவேண்டும்?’ என்று கேட்டாள். அதற்கு யுதிஷ்டிரர், ‘தேவி, இதோ, இந்த இமயமலையைப்பார் எவ்வளவு எழிலோடும் மாட்சிமையோடும் காட்சி யளிக்கின்றது! நான் இதனை நேசிக்கிறேன். இது எனக்கு ஒன்றும் தருவதில்லை.

அழகும் கம்பீரமும் நிறைந்தவற்றில் உள்ளத்தைப் பறிகொடுப்பது என் இயல்பு.அதனால் நான் அதனை விரும்புகிறேன்.அது போலவே இறைவனை நான் நேசிக்கிறேன்.அவரே அனைத்து அழகிற்கும் கம்பீரத்திற்கும் மூலகாரணம். அன்பு செலுத்தப்பட வேண்டியவர் அவர் ஒருவரே.அவரை நேசிப்பது என் இயல்பு. ஆதலால் நான் அவரை நேசிக்கிறேன்.நான் எதுவும் கேட்கவில்லை.அவர் விருப்பம் போல் என்னை எங்கு வேண்டுமானாலும் வைக்கட்டும்.அன்புக்காகவே அவரிடம் நான் அன்பு செலுத்த வேண்டும்.அன்பை விலை பேச என்னால் முடியாது’ என்றார்.







கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட இரு வீடுகள் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது சாவகச்சேரி கோயில் குடியிருப்பில் வசிக்கும் இரு குடும்பங்களுக்கு நேற்று கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க , கொமர்ஷல் வங்கியின் பிரதான இயக்குநர் ரவி டயஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்கள் வழங்கப்படுவதையும் வீட்டு உரிமையாளர்களோடு கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.கரன்)

# அனைத்து தரப்பினருக்குமான முரண்பாடுகளை களைவதில் அதிக கவனம் எடுக்க வேண்டும்

## இலங்கை அரசை வலியுறுத்துகிறது அமெரிக்கா

இலங்கையில் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளதாகப் பல்வேறு தரப்புக்களாலும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அது தொடர்பான உண்மைகளைக் கண்டறிவதிலும் அனைத்துத் தரப்பினருக்குமிடையிலான முரண்பாடுகளைக் களைவது தொடர்பிலும் அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டுமென அமெரிக்கா எதிர்பார்ப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளரும் உதவிச் செயலாளருமான பிலிப் ஜே.குரோவ்லியே தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு யுத்தம் முடிவுற்றதன் பின்னரான காலப்பகுதியில் இலங்கை அரசாங்கமானது நாட்டை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்வதற்கான அனைத்து தகுதிகளையும் கொண்டுள்ளது.

அதன் போது அனைத்து இன மக்களினதும் அபிலாஷைகளையும் புரிந்து கொண்டு முன்னேற்றத்துக்கான இலக்குகளை அடைவதற்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாடொன்றில் வைத்தே இந்தக் கருத்துக்களை அவர் வெளியிட்டுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

தேர்தல் மூலம் மாபெரும் மக்கள் பலமொன்றினைப் பெற்றுக் கொண்டுள்ள அரசாங்கம் அனைத்து இன மக்களிடையேயும் இன ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் முயற்சிகளை முடுக்கி விட்டு எல்லா மக்களினதும் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு செயற்படும் போதுதான் சுபீட்சமான இலங்கையைக் கட்டி யெழுப்பக் கூடியதாக இருக்கும்.

அப்பாவி மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பான விசாரணை குறித்த பேச்சுகள் உள்ளனவா என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கத் தயங்கிய அவர் இலங்கை அரசாங்கத்தின் வெளிப்படையான திறமைகள் விசேட பொறுப்புடமையாக மாறியுள்ளது என்றார்.

இலங்கையின் எதிர்காலத்திற்கு அது மிக முக்கியமானது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை ஒபாமாவின் மனித உரிமைகள் குறித்த விடயங்களில் ஏமாற்றமடைந்திருந்தாலும் தனது நிர்வாகத்தின் சிரேஷ்ட வெளிநாட்டுக் கொள்கை ஆலோசகர்களான சமந்தா பவர் மற்றும் டேவிட் பிரஸ்மன் ஆகியோரை கொழும்புக்கு அனுப்பி இலங்கையர்களுடன் ஆலோசனை நடத்தியிருப்பதற்கு அமெரிக்க வாழ் தமிழர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கும் அவர் சார்ந்த ஜனநாயக கட்சிக்கும் ஆதரவை வழங்க முன் வந்துள்ள அமெரிக்கா வாழ் தமிழர்கள் இலங்கை விவகாரங்களில் ஒபாமாவின் அடுத்த இருவருட கால பதவிக் காலத்தில் நெருங்கிய கவனம் செலுத்தப்படுவதற்கான அறிகுறி தென்படுவதாக உணர்கின்றனர் என பி.ஆர் இணையத் தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

புஷ் நிர்வாகம்தமது பக்கம் கவனம் செலுத்தாத காரணத்தால் இனியும் அத்தகைய உதவிகளை குடியரசுக் கட்சியிடம் எதிர்பார்க்க முடியாது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# தமிழர்களுக்கு சொந்தமான காணிகளை அபகரிக்கும் திட்டம் அரசுக்கு இல்லை

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

தமிழர்களுக்கு சொந்தமான தனிப்பட்ட காணிகளை அபகரிக்கும் திட்டம் அரசுக்கு கிடையாது என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற உயர்மட்ட கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழருக்கு சொந்தமான தனிப்பட்ட காணிகளை அரசு கையகப்படுத்தி இருக்கிறது என்று கூறப்படும் தகவல்கள் பொய்யானவை ஆகும்.

குறிப்பாக புதுக்குடியிருப்பு, முறுகண்டி ஆகிய இடங்களில் தமிழருக்கு சொந்தமான தனிப் பட்ட காணிகள் அரசினால் அபகரிக்கப் பட்டிருக்கின்றன என்பதில் எவ்விதமான உண்மையும் இல்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்னும் 20 ஆயிரம் அகதிகள் வரைதான் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியவர்களாக உள்ளனர் எனக் கூறினார். (ஸ்ரீ-2)

# 350 மீற்றர் உயரமான தொலைக்காட்சி கோபுரம் அமைக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

350 மீற்றர் உயரமான தொலைக்காட்சி கோபுரம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான அனுமதியினை அமைச்சரவை வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச திட்டத்திற்கே அமைச்சரவை தமது அனுமதியை வழங்கியுள்ளதாவும் இந்தக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ள ஈபிள் கோபுரத்தை ஒத்ததாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோபுரத்தை அண்டியுள்ள பிரதேசம் பூங்கா போன்ற மக்களை குறிப்பாக உல்லாச பயணிகளை கவரும் இடமாக இருக்கும் எனவும் எப்படியிருப்பினும் இந்த கோபுரம் நிர்மாணிக்கப்படவுள்ள இடம் குறித்து இதுவரை தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லை.

திட்டம் குறித்து ஆரம்ப கணிப்பீடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என நம்பப்படுகிறது.

மேல் மாகாணத்தில் இந்த தொலைக்காட்சி கோபுரம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் சகல தொலைக்காட்சி நிலையங்களும் இந்தக் கோபுரத்தை பயன்படுத்தும் படி வேண்டப்படுவார்கள் என அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# விண்வெளிக்கு செல்லும் ரோபோ

பூமியில் இருந்து சுமார் 300 கி.மீ தொலைவில் சுற்றி வருகிறது சர்வதேச விண்வெளி மையம் (ஐ.எஸ்.எஸ்). பல்வேறு நாடுகளைச் சோந்த விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் சென்று தங்கி ஆய்வுப் பணிகளைமேற்கொண்டு வருகின்றனர்.

இங்குள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் ஐ.எஸ்.எஸ்.சில் பராமரிப்பு, பழுதடையும் கருவிகளை சரிசெய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வசதியாகவும் ரோபோட்நாட் - 2 என்ற ரோபோவை நாசாவும் ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளன.

புவியீர்ப்பு விசை இல்லாத இடத்திலும் ரோபோட்நாட் திறம்பட செயற்படுகிறதா என்ற இறுதிக்கட்ட சோதனை நடந்து வருகிறது. இது முடிந்த பின் விண்ணுக்கு புறப்படுகிறது இந்த ரோபோ. (ஸ்ரீ-2)



யா/அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் விருந்தினர்கள் பாடசாலை ஆசிரியையினால் மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்கப்படுவதையும் அதிபர் ச.வேலழகன், பிரதி அதிபர் அ.பத்மநாதன், யா/அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர், 511 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி ஆகியோரைப் படத்தில் காணலாம்.

### ஒரே ஒரு இருபது–20 போட்டி

# சுராஜ் ராண்டிவ் சுழல் ஜாலம்; இலங்கையிடம் வீழ்ந்தது ஆஸி.



(பேர்த்)

ராண்டிவின் துல்லியமான பந்து வீச்சின் மூலம் ஒரேஒரு இருபது–20 போட்டியில் இலங்கையணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி ஒரேஒரு இருபது–20 போட்டி, 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் ஒரேஒரு இருபது–20 போட்டி நேற்று பேர்த்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றுபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முன்னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் 20 ஓவர்களில்8 விக்கெட்டுக்களையிழந்து 133 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹடின் 30 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 35 ஓட்டங்களையும், சிமித் 23 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 34 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சுராஜ் ராண்டிவ் 3 விக்கெட்டுக்களையும், பெரேரா 2 விக்கெட்டுக்களையும், மலிங்க, பெர்னாண்டோ ஆகியோர் தலா ஒருவிக் கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 134 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி சங்கக்கார, டில்சானின் அதிரடியில் 16.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 135 ஓட்டங்களைக் குவித்து 7 விக்கெட்டுக்கள்வித்தியாசத்தில்வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் குமார் சங்கக்கார ஆட்டமிழக்காமல் 43 பந்துகளில் (6பவுண்டரிகள் உட்பட) 44 ஓட்டங்களையும், திலகரட்ண டில்சான் 34 பந்துகளில் (6பவுண்டரிகள் உட்பட) 41 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்த்தனா 24 ஓட்டங்களையும், பெரேரா ஆட்டமிழக்காமல் 4 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர் அடங்கலாக) 17 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் நான்ஸ், சிடில், சிமித் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டை வீழ்த்தினர். இப்போட்டியில் இலங்கையணியின் வெற்றிக்குவழிசமைத்த சுராஜ் ராண்டிவ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# பி.பி.எல். இருபது–20 தொடர் அவுஸ்திரேலிய வீரர்கள் விருப்பம்

(மெல்போர்ன்)

பிக் பேஷ் லீக் (பி.பி.எல்) இருபது–20 தொடரில் அவுஸ்திரேலிய அணி வீரர்கள் பங்கேற்பதற்கு ஏதுவாக ஒருநாள் போட்டிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்என அவுஸ்திரேலிய வீரர்கள் சங்கம் (ஏ.சி.ஏ) கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தியாவின் ஐ.பி.எல் பாணியில் அவுஸ்திரேலியா பி.பி.எல் தொடரை நடத்தவுள்ளது. தற்போது அவுஸ்திரேலிய வீரர்கள் அதிக போட்டிகளில் விளையாட வேண்டியிருப்பதால் உள்ளூர் இருபது–20 போட்டிகளில் பங்கேற்றமுடியாத நிலையுள்ளது.

இதுகுறித்து அவுஸ்திரேலிய அவுஸ்திரேலிய வீரர்கள் சங்கம் (ஏ.சி.ஏ), சி.ஏக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

பி.பி.எல்லில் அனைத்து அவுஸ்திரேலிய வீரர்களும் விளையாடினால் தான் தொடர் வெற்றியடையும். இதற்கேற்ப வீரர்களுக்கு பணிச்சுமையை குறைக்க வேண்டும். போலார்ட், அப்ரிடி, ஹயில் போன்ற வெளிநாட்டு நட்சத்திரங்களும் பங்கேற்க ஏற்பாடு செய்யவேண்டும் என தெரிவித்துள்ளது.

இதுபற்றி சி.ஏ தலைமையதிகாரி ஜேம்ஸ் சதர்லாண்ட் கூறுகையில்,

இத்தொடரில் முன்னணி அவுஸ்திரேலிய வீரர்கள் பங்கேற்பது மிகவும் சிறப்புவாய்ந்ததுதான். ஆனால் இதற்காக அவுஸ்திரேலிய அணி விளையாடும் ஒருநாள் போட்டிகளை குறைத்துக்கொள்ளமுடியாது என்றார்.

# 'டுவிட்டர்' பயன்படுத்த இந்திய வீரர்களுக்கு தடை

இந்திய வீரர்கள் டுவிட்டர் இணைய தளத்தை பயன்படுத்துவதற்கு இந்திய கிரிக்கெட்கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ) தடைவிதிக்கமுடிவுசெய்துள்ளது.

டுவிட்டர் இணையதளத்தின் மூலம் வெளியிடப்படும் குறும் தகவல்கள் ஒரே நேரத்தில் இலட்சக்கணக்கானவர்களை சென்றடைகிறது. இதில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரிற்கு மட்டும் 7 இலட்சத்து 5 ஆயிரத்து 374 ரசிகர்கள் இருக்கின்றனர்.

இதே தகவல்களால் பல மோசமான முடிவுகளும் ஏற்பட்டுள்ளன. முன்னாள் ஐ.பி.எல் தலைவர் லலித் மோடி வெளியிட்ட செய்தியால் அவரது பதவியேபறிபோனது. இங்கிலாந்தின் பீற்றர்சன் தேர்வாளர்கள் குறித்து கூறிய தகவலால் அபராதம் கட்டினார். இந்தவரிசையில் இந்தியாவின் யுவராஜ் மற்றும் ரோகித் சர்மாவும் சர்ச்சையில் சிக்கியுள்ளனர்.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தேர்வு செய்யப்படாதது குறித்து தேர்வாளர்களைக் கண்டித்து டுவிட்டரில் செய்திவெளியிட்டார் யுவராஜ். தவிர இந்திய அவுஸ்திரேலிய அணிகள் இடையிலான கோவா ஒருநாள் போட்டிகுறித்துயுவராஜ்வெளியிட்ட டுவிட்டர் செய்தியில்,

நேற்றுஇரவு மீண்டும்பெய்தமழையால் இருபது–20 போல, போட்டி நடக்கும் அல்லது நடக்காமலும் போகும். எப்படியும் மதியம் ஒரு மணிக்கு முன்பாக போட்டி ஆரம்பமாக வாய்ப்பில்லை என்று வெளியிட்டார்.

**ரோகித் அவசரம்**

இதேபோல்ரோகித்சர்மாவெளியிட்ட செய்திதான் அதிக பரபரப்பை ஏற்படுத்தியதாம். அதாவது போட்டி நடுவர் கிறிஸ் பிராட் மைதானத்தைச்சோதனை செய்தபின்முடிவை முறைப்படி அறிவிப்பதற்கு 10நிமிடம் முன்பாக ரோகித்சர்மா வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் கோவாப் போட்டி ரத்துச் செய்யப்பட்டது எனத் தெரிவித்தார்.

**பி.சி.சி.ஐ எதிர்ப்பு**

இந்தச்செய்திகள் பி.சி.சி.ஐக்கு கடும் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து பி.சி.சி.ஐ. நிர்வாகியொருவர் கூறுகையில்.

போட்டி நடக்கும் நாட்களில் டுவிட்டரைப் பயன்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொள்வோம். இது நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் இருந்து நடைமுறைக்கு வருகிறது என்றார்.

# பட், அமீர் மேல்முறையீடு ஐ.சி.சி நிராகரித்தது




(டுபாய்)

பாகிஸ்தான் வீரர்கள் சல்மான் பட், முகமட் அமீர் ஆகியோரது மேல்முறையீட்டை சர்வதேச கிரிகெட் சபை (ஐ.சி.சி) தள்ளுபடி செய்தது. இவர்கள் மீதான தடை தொடருமென அறிவித்துள்ளது.

இங்கிலாந்துக்கெதிரான லோர்ட்ஸ் டெஸ்டில் பாகிஸ்தான் வீரர்கள் சல்மான் பட், முகமட் அமீர் ஆகியோர் ஸ்பொட் பிக்சிங்கில் ஈடுபட்டனர். அது குறித்து விசாரித்த ஐ.சி.சி ஊழல் தடுப்புக் குழு சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க இவர்களுக்கு தடைவிதித்தது.

இதை எதிர்த்து மேல்முறையீடு செய்தனர். முகமட் ஆசிப் மட்டும் வாபஸ் பெற்றார். மற்ற இருவர் மீதான மேல்முறையீட்டை கடந்த இரண்டு நாட்களாக விசாரித்த ஐ.சி.சி இவர்கள் மீதான தடையை நீக்க மறுத்தது.








யாழ்.இந்துக்கல்லூரியின் ஆங்கிலதின விழா கடந்த 28 ஆம் திகதி கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் கல்லூரி அதிபர் வி.கணேசராசா மங்கல விளக்கேற்றுவதையும் முதலிரண்டு படங்களிலும் பொறுப்பாசிரியர் மு.சிவதாசன், பிரதமவிருந்தினர் வைத்திய கலாநிதி தி.கெங்காதரன், ஆங்கிலமன்றத்தலைவர் பி.நந்திகரன் ஆகியோர் உரையாற்றுவதையும் சிறப்புவிருந்தினர் இ.ச.பே.நாகரத்தினம் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## யாழ்.பொது...

அமுலுக்குவரும் வகையில் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவ் இடமாற்றம் பலாலி படைத் தலைமையகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. (ந-5)

## சீனப்...

விற்கான இலங்கைத் தூதுவர் கருணாதிலக, அமுனுகம ஆகியோர் சீன பிரதமருடனான சந்திப்பில் இடம் பெற்றிருந்தனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் நடந்த இப் பேச்சுவார்த்தையில் இலங்கையில் உட்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள உதவிகளை வழங்குவதாக சீனா உத்தரவாதமளித்துள்ளது.

இதேவேளை நேபாளப் பிரதமர் ராம் பாரான் யாதேவை சந்தித்து ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இரு நாட்டு சமய உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளல் மற்றும் கல்வித்துறையை மேம்படுத்தல் போன்றன குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டுகளில் நேபாள மாணவர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் இச் சந்திப்பில் அறிவிக்கப்பட்டது. (ந-5)

# அரசாங்க வைத்தியசாலைகளில் டிசம்பர் முதல் மாலை 6.30 வரை வெளி நோயாளர் பிரிவு இயங்கும்

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளை மாலை 4.30 மணிக்கு பின்னரும் திறந்து வைத்திருக்கும் திட்டம் டிசெம்பர் முதலாம் திகதியிலிருந்து கட்டாயமாக அமுல்படுத்தப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பாக பொது வைத்தியசாலைகள் மற்றும் போதனா வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுடன் தான் கலந்துரையாடியதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு கால அவகாசம் வழங்குவதற்கு நான் இணங்கினேன்.

அவர்கள் வெளிநோயாளர் பிரிவுகளை மாலை 4.30 இற்குப் பின்னர் மேலும் இருமணித்தியாலங்கள் திறந்து வைத்திருக்க விரும்பினார்கள்.

இதன்படி மாலை 6.30 மணிவரை வெளிநோயாளர் பிரிவுகள் திறந்திருக்கும். இந்த இரு மணித்தியால நீடிப்பின் வெற்றியை மதிப்பீடு செய்தபின் மாலை 6.30 மணிக்குப் பின்னரும் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளை திறந்திருப்பது குறித்து ஆராயப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை போதிய ஆளணி மற்றும் விநியோக வசதிகளை அமைச்சு வழங்கினால் மாலை 4.30 மணிக்குப் பின்னர் வெளி நோயாளர் பிரிவுகளை திறந்திருப்பதில் பிரச்சினை எதுவும் இல்லை என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் சந்திக்க எபிட்டகடுவ கூறியுள்ளார்.

இது குறித்து இறுதித் தீர்மானம் மேற்கொள்வதற்காக, மேற்படி சங்கத்தின் மத்திய குழு இம்மாதம் 14 ஆம் திகதி சந்திக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந-5)

# ஹெஜிங் ஒப்பந்தம் குறித்து இன்று சிங்கப்பூரில் விசாரணை

(கொழும்பு)

அமெரிக்க சி.ஐ.டி.ஐ. வங்கிக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட சர்ச்சைக்குரிய ஹெஜிங் ஒப்பந்தம் தொடர்பிலான விசாரணை இன்று சிங்கப்பூரில் ஆரம்பமாகவுள்ளது என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த தெரிவித்தார். இவ் விசாரணை தொடர்ந்து நவம்பர் 13ஆம் திகதிவரை இடம் பெறவுள்ளது.

பெற்றோலிய வளத்துறை முன்னால் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, பெற்றோலியக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் அஜந்த டிமெல் உட்பட மத்திய வங்கி மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் 14 பேர்கொண்டகுழு மத்தியஸ்தர்கள்முன் சாட்சியமளிக்கவுள்ளது. (ந-5)

# இந்திய வெளியுறவு அமைச்சர் யாழ்ப்பாணம் வருவார்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா எதிர்வரும் 25 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மூன்றுநாள் விஜயம்மொன்றை மேற்கொண்டு இங்குவரும் அவர் யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் இரண்டு புதிய உயர்ஸ்தானிகராலய கிளைகளைத் திறந்து வைப்பார்.

வடக்குக் கிழக்கில் இடம்பெயர்ந்து வாழும் மற்றும் மீள்குடியேற்றப்பட்ட மக்களை நேரில் சந்தித்து நிலைமைகளை அவர் கண்காணிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா மேற்பார்வை செய்யவுள்ளார். (ந-5)

## இராணுவ...

வொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித் துள்ளது.

இந்தப் பிரிவின் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் முன்னர் இராணுவப் பேச்சாளராகவும் பின்னர் பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்புத்துறை அதிகாரியாகவும் கடமையாற்றியவர் என அவை மேலும் தெரிவித்துள்ளன.

இதனிடையே தென்னிலங்கையில் அரசுக்கு எதிராக சிங்கள மாணவர்களின் போராட்டங்கள் அதிகரித்து வருகையில், அரசு இந்த புதிய படைப்பிரிவை அமைத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## இலங்கை...

கொடுக்க அதற்கு இலங்கை அரசும் அனுமதித்திருந்தது.

இந்நிலையில் ஷாங்காய் எக்ஸ்போ கண்காட்சியில் கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீனப் பிரதமரை சந்தித்துப் பேச்சு நடத்தி யுள்ளதுடன், இலங்கையின் உட்கட்டுமான பணிகளை மேற்கொள்வதற்கும் சீனாவின் உதவியை கேட்டிருந்தார்.

இதனால் இந்தியா கடுப்பேறியுள்ளதாக இந்திய இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)

## அவுஸ்தி...

இணைந்து கொண்ட இலங்கைத் தமிழர்கள் ஒரு தொகையினரையும் சேர்த்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தனர்.

15 குழந்தைகள் 14 பெண்கள் 66 ஆண்கள். உண்ண உணவில்லை. குடிக்க நீரில்லை. கரை ஒதுங்க வழியில்லை. உதவிக்கு வேறு ஆட்கள் இல்லை. மூவர் மரணமடைந்த நிலையில் கடந்த 14ஆம் திகதி பனைடான் தீவை சென்றடைந்தனர்.

அங்கு பசிக் கொடுமையால் நத்தைகளைக் கூட சாப்பிட்டிருக்கின்றனர். இவர்களை இந்தோனேசிய கடற்படையினர் கடந்த 19ஆம் திகதி நள்ளிரவு நேரம் காப்பாற்றினர்.

மறுநாள் இவர்கள் தலைநகர் ஜகார்த்தாவுக்கு கொண்டு செல்லப்பட்டு மிகவும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் சிறைவைக்கப்பட்டுள்ளார்கள். இத்தகவலை சிறையிலிருக்கும் ஒருவர் தெரிவித்தார். (ந-5)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் கந்தையா குலசிங்கம்



பிறப்பு 13 06 1931

மறைவு 03 10 2010

எங்கள் இல்லத் தலைவர் அமரர் கந்தையா குலசிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட,நேரிலும் தொலைபேசிகள் மூலமும் ஆறுதல் தந்த மற்றும் பலவழிகளிலும் உதவிகள் செய்த அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகள்.

நாளை 02.11.2010 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

Dr. கு.சுரேஷ்குமாரும் குடும்பத்தினரும்

15,சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில். (2784)

வட பிராந்தியத்திற்கான DHL சேவையினை
தீபாவளிப் பண்டிகை விசேட விலைக் கழிவுடன் கொண்டாடுங்கள்
ஆகாய கடல்வழி மார்க்கமாக 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை
கடிதங்கள், ஆவணங்கள், அன்பளிப்புப்பொருட்கள்
உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், CD,DVD
மற்றும் சகல விதமான பொருட்களையும்
மிக விரைவாக அனுப்பிடலாம்
DHL WORLDWIDE EXPRESS
TCN Express
No-2B, Nelson Place, Colombo-6
திருமுருகன் கொம் ஹெற்
இல-259, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
இல-46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
பிரதான வீதி, நெல்லியடி.
இல-6.திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
4, மில் றோட், வவுனியா.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.